தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 255 27.04.2026 திங்கட்கிழமை
Chennai Volume: 01 Issue: 255 Monday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கட்கிழமை
(27-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-14
பிறை: வளர்பிறை
திதி
திதி ஏகாதசி இரவு 8.53 வரை பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
பூரம் இரவு 11.33 வரை பிறகு உத்திரம்.
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 10.30-12.00 மணி
சூலம் - கிழக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நட்பு |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | வரவு |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | போட்டி |
| கன்னி | அமைதி |
| துலாம் | அன்பு |
| விருச்சிகம் | பாசம் |
| தனுசு | புகழ் |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | நன்மை |
| மீனம் | துணிவு |

# "நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மைல்கல்"
# கல்பாக்கம் அணு உலை குறித்து பிரதமர் மோடி பாராட்டு

**புது டெல்லி, ஏப்.27:**

கல்பாக்கத்தில் அமைந்துள்ள விரைவு ஈனுலை, நிலைமாறு நிலையை அடைந்தது இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளது என மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடம் நேற்று பிரதமர் மோடி ஆற்றிய உரையின் விவரம்: தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் அமைந்துள்ள 'விரைவு ஈனுலை' (Fast Breeder Reactor) 'நிலைமாறு நிலையை' (Criticality) அடைந்துள்ளது. 'நிலைமாறு நிலை' என்பது ஒரு அணு உலை முதன்முறையாகத் தனக்குத்தானே இயங்கக்கூடிய அணுக்கருத் தொடர்வினையை வெற்றிகரமாக அடையும் கட்டமாகும். இந்தக் கட்டம், அந்த அணு உலை முழுமையாகச் செயல்பாட்டு நிலைக்குள் நுழைவதைக் குறிக்கிறது.

இந்தியாவின் அணுசக்திப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் ஆகும். இந்த அணு உலை முழுமையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆற்றலை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், இந்த ஈனுலை எதிர்காலத்திற்கான புதிய எரிபொருளையும் உற்பத்தி செய்கிறது. இந்தியாவின் அணுசக்தித் திட்டத்திற்கு விலைமதிப்பற்ற பங்களிப்புகளை வழங்கிய விஞ்ஞானிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்.

இத்திட்டம் தொழில்துறை வளர்ச்சிக்கும், எரிசக்தித் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும் பயனளிக்கும்.

இந்தியா காற்றாற்றல் மின்சார உற்பத்தியிலும் முன்னணியில் உள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா சமீபத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தியாவின் காற்றாற்றல் உற்பத்தித் திறன் தற்போது 56 ஜிகாவாட்களைத் தாண்டியிருக்கிறது. கடந்த ஓராண்டில் மட்டும், ஏறக்குறைய 6 ஜிகாவாட் அளவிற்கான புதிய உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. காற்றாற்றல் துறையில் இந்தியா மிக வேகமாக முன்னேறி வருகிறது. காற்றாற்றல் உற்பத்தித் திறனில் உலக அளவில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட நாட்டின் பல மாநிலங்கள் இத்துறையில் முன்னோடிகளாகத் திகழ்கின்றன. குஜராத் மாநிலத்தின் கட்ச், பாடன் மற்றும் பனஸ்கந்தா போன்ற பகுதிகளில் பிரம்மாண்டமான புதுப்பிக்கத்தக்க காற்றாற்றல் பூங்காக்கள் உருவாகி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சிக்குச் சூரிய ஆற்றலும், காற்றாற்றலும் இன்றியமையாதவை.

உலகின் மிகப்பெரிய மக்கள்தொகைக்கணக்கெடுப்பு இந்தியாவில் நடக்கிறது. 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தகவல்களும் நேரடியாக டிஜிட்டல் வடிவில் பதிவு செய்யப்படுகின்றன. வீடு வீடாகச் செல்லும் கணக்கெடுப்பாளர்கள், அனைத்துத் தகவல்களையும் உள்ளிடுவதற்கு ஒரு மொபைல் செயலியைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இந்த முறை மக்கள்தொகைக்கணக்கெடுப்பு எளிதாக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது அரசாங்கத்தின் பணி மட்டுமல்ல, அது அனைவரின் பொறுப்பு. இதில் மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. மக்களால் வழங்கப்படும் தகவல்கள் முற்றிலும் பாதுகாப்பானவை, ரகசியமானவை.

'ரன் ஆஃப் கட்ச்' (Rann of Kutch) பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பருவமழை முடிவடைந்த உடனேயே லட்சக்கணக்கான 'ஃபிளமிங்கோ' பறவைகள் வந்து குவிகின்றன. அந்தப் பகுதி முழுவதும் இளஞ்சிவப்பு நிறமாக மாறிவிடுவதால், அதற்கு 'ஃபிளமிங்கோ நகரம்' (Flamingo City) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. கட்ச் பகுதி மக்கள் அந்தப் பறவைகளை 'லக்கா ஜி கே பாராதி' என்று அழைக்கின்றனர். தற்போது, கட்ச் பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அழகான அடையாளமாக இந்த 'லக்கா ஜி கே பாராதி' பறவைகள் மாறியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

மூங்கில் துறையில் வடகிழக்கு மாநிலங்கள் வெற்றி அடைந்துள்ளன. ஒரு காலத்தில் சுமையாகக் கருதப்பட்ட மூங்கில்கள், இப்போது வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் புத்தாக்கத்திற்குப் புதிய உத்வேகத்தை அளிக்கின்றன. பிரிட்டிஷ் சட்டத்தின்படி, மூங்கில் ஒரு மரமாக வரையறுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. மூங்கிலை எங்கும் கொண்டு செல்வது மிகவும் கடினமாக இருந்தது. அதன் விளைவாக மக்கள் மூங்கில் தொடர்பான தொழில்களில் இருந்து விலகத் தொடங்கினர். எனது அரசாங்கம் 2017-ல் சட்டத்தை மாற்றி, மூங்கிலை மர வகையிலிருந்து நீக்கியது.

இன்று வடகிழக்கு முழுவதும் மூங்கில் தொழில் துறை செழித்து வளர்ந்து வருகிறது. திரிபுராவின் கோமதி மாவட்டத்தைச் சேர்ந்த பிஜோய் சூத்ரதர் மற்றும் தெற்கு திரிபுராவைச் சேர்ந்த பிரதீப் சக்ரவர்த்தி ஆகியோர் புதிய மூங்கில் சட்டங்களை தங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதி, தங்கள் பணியை தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்துள்ளனர். இன்று, அவர்கள் முன்பை விட சிறந்த மற்றும் அதிக மூங்கில் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள்.

நாகாலாந்தின் திமாபூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூங்கில் சார்ந்த உணவுப் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் செய்துள்ள பல சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. மூங்கில் மரச்சாமான்கள் மற்றும் கைவினைப் பொருட்களில் பணியாற்றி வரும் 'கோரோலோ கிரியேட்டிவ் கிராஃப்ட்ஸ்' போன்ற குழுக்களும் உள்ளன. சிக்கிமில் உள்ள காங்டாக் அருகே, மூங்கிலிலிருந்து கைவினைப் பொருட்கள், ஊதுபத்திகள், மரச்சாமான்கள் மற்றும் உள் அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கும் 'லகாஸ்டல் மூங்கில் எண்டர்பிரைஸ் டீம்' சிறப்பாக செயல்படுகிறது.

இந்திய தேசிய ஆவணக் காப்பகம் 20 கோடிக்கும் மேற்பட்ட விலைமதிப்பற்ற ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கிப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. இந்த ஆவணங்களில், போஜ பாத்ரா குறித்து எழுதப்பட்ட 7ஆம் நூற்றாண்டு கில்கிட் கையெழுத்துப் பிரதிகளும், 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவாரஸ்யமான நூலான சிறிபூவாலயமும் அடங்கும்.

இந்த ஆவணங்களில், ராணி லட்சுமிபாய் தொடர்பான சில முக்கியக் கடிதங்களும் அடங்கும்; அவை 1857-ல் அவர் எடுத்த சில முடிவுகளை வெளிப்படுத்துகின்றன. நேதாஜியின் வாழ்க்கை, ஆசாத் ஹிந்த் ஃபௌஜ் மற்றும் அவரது உரைகள் தொடர்பான பல ஆவணங்கள் உள்ளன.

குழந்தைகள் தங்கள் கோடை விடுமுறையை முழுமையாகக் கொண்டாட வேண்டும். புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். கோடைக்காலத்தில் அனைவரும் தங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

## 1-ந்தேதி வைகை ஆற்றில் இறங்கும் வைபவம்
## அழகர் கோவில் சித்திரை திருவிழா இன்று தொடங்குகிறது

**மதுரை,ஏப்.27:**

கள்ளழகர் கோவிலில் இருந்து புறப்பட்டு மீண்டும் கோவிலை வந்தடையும் வரை வழிநெடுகிலும் 490-க்கும் மேற்பட்ட மண்டக படிகளில் எழுந்தருளுகிறார்.



108 வைணவ தலங்களில் ஒன்றாகவும்,திருமாலிருஞ்சோலை என்றும் அழைக்கப்படும் அழகர் கோவிலில் உள்ள கள்ளழகர் கோவிலில் வருடந்தோறும் சித்திரை திருவிழா விமரிசையாக நடைபெறும். மலையில் இருந்து புறப்படும் சுந்தரராஜ பெருமாள் மதுரையில் தங்க குதிரையில் எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார். இதனை காண லட்சக்கணக்கானோர் திரளுவர்.

இந்த ஆண்டுக்கான விழா இன்று (27-ந்தேதி) அழகர் கோவிலில் தொடங்குகிறது. அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு சுந்தரராஜ பெருமாளுக்கும், ஸ்ரீதேவி பூதேவியருக்கும் சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

இன்று மாலை தீவட்டி பரிவாரங்களுடன் சுந்தரராஜ பெருமாள் கோவில் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளுகிறார். அங்கு அவருக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெறும். நாளை மறுநாளும் இதே நிகழ்வு நடைபெறும்.

29-ந் தேதி மாலை 6.15 மணிக்கு கண்டாங்கி பட்டு உடுத்தி நேர்கம்பு ஏந்தி சகல பரிவாரங்களுடன் கள்ளழகர் சப்பரத்தில் எழுந்தருளுகிறார். அங்கு 18-ம் படி கருப்பணசாமி முன்பு சிறப்பு பூஜைகள் நடைபெறும். அதனை தொடர்ந்து கள்ளழகர் மலையில் இருந்து மதுரைக்கு புறப்படாகிறார்.

இந்த விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள். வழிநெடுகிலும் கிராம மக்கள் கள்ளழகரை வரவேற்று தரிசனம் செய்வார்கள். மறுநாள் 30-ந்தேதி காலை 6.30 மணிக்கு மதுரை மூன்று மாவடி பகுதிக்கு கள்ளழகர் வந்தடைவார். அப்போது மதுரை மக்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்கும் எதிர்சேவை நிகழ்ச்சி நடைபெறும்.

தொடர்ந்து அன்று இரவு 8.30 மணிக்கு தல்லாக்குளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் எழுந்தருளும் கள்ளழகருக்கு திருமஞ்சனம் நடைபெறுகிறது. அன்று இரவு முழுவதும் அந்த பகுதியே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

மறுநாள் (1-ந்தேதி) அதிகாலை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடி கொடுத்த மாலையை சாற்றி கொண்டு கள்ளழகர் வைகை ஆற்றுக்கு புறப்படும் நிகழ்வு நடைபெறும். அதிகாலை 3 மணிக்கு தல்லாகுளம் கருப்பணசாமி கோவில் எதிரே ஆயிரம் பொன் சப்பரத்தில் கள்ளழகர் எழுந்தருகிறார்.

அதனை தொடர்ந்து தங்க குதிரையில் பக்தர்கள் புடைசூழ வைகை ஆற்றுக்கு புறப்படுகிறார். அதிகாலை 5.35 மணி முதல் 5.55 மணிக்குள் கோவிந்தா கோஷம் முழங்க கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார்.

அன்று பிற்பகல் ராமராயர் மண்டபத்தில் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடக்கிறது. அன்று இரவு வண்டியூர் வீரராகவ பெருமாள் கோவிலில் எழுந்தருளுகிறார். மறுநாள் (2-ந் தேதி) காலை வண்டியூர் தேனூர் மண்டபத்தில் சேஷ வாகனம், கருட வாகனத்தில் எழுந்தருளும் நிகழ்வு நடைபெறும்.

அப்போது மண்டுக முனிவருக்கு சாபம் தீர்த்தல் நிகழ்ச்சியும் நடக்கிறது. அன்று இரவு 10 மணிக்கு ராமராயர் மண்டபத்தில் தசாவதார நிகழ்ச்சி நடைபெறுகிறது.

3-ந் தேதி அனந்தராயர் பல்லக்கில் எழுந்தருளும் கள்ளழகர் இரவு திருமஞ்சனம் முடிந்து 4-ந் தேதி அதிகாலை பூப்பல்லக்கில் அழகர் மலைக்கு புறப்படாகிறார். 5-ந்தேதி காலை இருப்பிடம் சேருகிறார்.

கள்ளழகர் கோவிலில் இருந்து புறப்பட்டு மீண்டும் கோவிலை வந்தடையும் வரை வழிநெடுகிலும் 490-க்கும் மேற்பட்ட மண்டக படிகளில் எழுந்தருளுகிறார். இதற்காக கோவில் நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

### கேதார்நாத் கோயிலில் ரூ.20 குடிநீர் பாட்டில் ரூ.100-க்கு விற்பது ஏன்? வியாபாரி விளக்கம்

**டேராடூன், ஏப்.27:**

உத்தராகண்ட் மாநிலம், ருத்ரபிரயாக் மாவட்டத்தில் கேதார்நாத் கோயில் அமைந்துள்ளது. சுமார் 11,755 அடி உயரத்தில் உள்ள இந்த கோயில் கோடை காலத்தில் மட்டுமே திறந்திருக்கும்.

சில நாட்களுக்கு முன்பு கோயில் வளாகத்தில் உள்ள கடையில் பெண் பக்தர் ஒருவர் குடிநீர் பாட்டில் வாங்கினார். ரூ.20 விலை குறிப்பிடப்பட்ட ஒரு லிட்டர் பாட்டிலுக்கு கடைக்காரர் ரூ.100 வசூலித்தார். எதற்காக அதிக தொகை வாங்குகிறீர்கள் என்று பெண் பக்தர் கேட்டபோது கடைக்காரர் கூறியதாவது:

கேதார்நாத் கோயில் 5 மாதங்கள் வரை மட்டுமே திறந்திருக்கும். கோயில் வளாகத்துக்கு வருவதற்கு சாலை வசதி கிடையாது. இதனால் வாகனங்களில் பொருட்களை கொண்டு வர முடியாது. கோவேறு கழுதைகள் அல்லது தொழிலாளர்கள் மூலம் மட்டுமே பொருட்களை கோயில் வளாகத்துக்கு கொண்டு வர முடியும்.

ஒரு கோவேறு கழுதையில் 48 குடிநீர் பாட்டில்களை மட்டுமே எடுத்து வர முடியும். அதற்கு ரூ.3,500 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி தனது முதுகில் 40 கிலோ எடையை மட்டுமே சுமந்து வர முடியும். அவருக்கு ரூ.2,500 கூலி கொடுக்க வேண்டும். இந்த செலவைக் கணக்கிட்டே ரூ.20 மதிப்புள்ள ஒரு லிட்டர் குடிநீர் பாட்டிலுக்கு ரூ.80 முதல் ரூ.100 வரை வசூலிக்கிறோம். எங்களுக்கு குறைவான லாபம் மட்டுமே கிடைக்கிறது. இவ்வாறு கடைக்காரர் தெரிவித்துள்ளார்.

## கொடைக்கானலில் முதல்வர் நடைபயிற்சி
## 'செல்ஃபி' எடுத்து மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்

**கொடைக்கானல், ஏப்.27:**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் நட்சத்திர ஏரியின் அழகைரசித்தபடி முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தினருடன் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.26) காலை நடைபயிற்சி மேற்கொண்டார்.





தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், கொடைக்கானலுக்கு ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மதியம் வந்தார். வழிநெடுகிலும் தொண்டர்கள், பொதுமக்கள் உற்சாகத்துடன் முதல்வரை வரவேற்றனர்.

கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பத்தினருடன் முதல்வர் தங்கியுள்ளார். விடுதியில் கட்சியினர் யாரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. முதல்வர் வருகையை முன்னிட்டு, கொடைக்கானலில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை (நேற்று) காலை விடுதியில் இருந்து வெளியே வந்த முதல்வர் ஸ்டாலின், மனைவி துர்கா மற்றும் உறவினர்களுடன், கொடைக்கானல் நட்சத்திர ஏரி பகுதியில் இயற்கை காட்சிகளை ரசித்தபடி நடைபயிற்சி மேற்கொண்டார்.


அப்போது, பொதுமக்கள், சுற்றுலா பயணிகளிடம் நலம் விசாரித்த முதல்வர், அவர்களுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர். ஏரி பகுதியில் தூய்மை பணி மேற்கொண்ட தூய்மை பணியாளர்களிடம், கலந்துரையாடிய முதல்வர் அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

ஒரு மணி நேர நடைபயிற்சிக்குப் பிறகு முதல்வர் மீண்டும் தங்கும் விடுதிக்கு சென்றார். நேற்று (ஏப்.26) முழுவதும் அறையில் தங்கி ஓய்வெடுக்க உள்ளதாக திமுக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

ஏப்ரல் 29-ம் தேதி வரை ஓய்வெடுக்கும் முதல்வர் ஏப்ரல் 30-ம் தேதி மீண்டும் சென்னை திரும்ப உள்ளார். எனவே, ஏப்ரல் 30 வரை கொடைக்கானல் மலைப்பகுதியில் ஆளில்லா விமானங்கள் (ட்ரோன் கேமரா) பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.



## திருச்சி மலைக்கோட்டை பகுதியில் உள்ள தாயுமானசுவாமி கோயில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு திருக்கல்யாணம் விழா கோலாகலம்



**திருச்சி, ஏப்.27:**
திருச்சி மலைக்கோட்டை பகுதியில் உள்ள தாயுமானசுவாமி கோயில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணம் விழா கோலாகலமாக நடைபெற்றது.

சித்திரை மாதத்தையொட்டி ஆண்டு தோறும் நடைபெறும் இத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி பல்வேறு வாகனங்களில் சுவாமி-அம்பாள் வீதி உலா என நடைபெறுவதும் வழக்கம்.


இந்த விழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான திருக்கல்யாணம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தாயுமானசுவாமி மற்றும் மட்டுவார் குழலம்மை திருக்கல்யாணம் பக்தர்கள் முன்னிலையில் விமர்சையாக நடத்தப்பட்டது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து வழிபட்டனர். கோயில் வளாகம் முழுவதும் ஆன்மிக உற்சாகம் நிலவியதுடன், மேளதாளங்கள் முழங்க திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் விழாவையொட்டி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன், பக்தர்கள் "சிவ சிவ", "தாயுமான ஈசா" என கோஷங்கள் எழுப்பி பக்தி உணர்வுடன் வழிபட்டனர்.

சித்திரைத் திருவிழாவின் தொடர்ச்சியாக அடுத்தடுத்த நாட்களில் தேரோட்டம் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரயில் பாதை மேம்பாட்டு பணி காரணமாக காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம்



**சென்னை, ஏப்.27:**
ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் காரணமாக, காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கர்நாடகமாநிலம்பெங்களூரு கன்டோண்மென்ட்டில் ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதனால், இத்தடத்தில் 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, சென்னை சென்ட்ரல் - அசோகாபுரம் காவேரி விரைவு ரயில் (16021), வரும் ஜூன் 3, 4, 5, 6, 9, 10, 11, 21, 26 ஜூலை 2, 5, 6-ம் தேதிகளில் ரத்து செய்யப்படும்.

அசோகாபுரம்-சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (16022) வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11, 12, 22, 27 ஜூலை 3, 6, 7ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும் கே.எஸ்.ஆர். பெங்களூரு- சென்னை சென்ட்ரல் அதிவிரைவு ரயில் (12658), வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11,12, 22, 27 ஜூலை 3, 6, 7 ஆகிய தேதிகளிலும், சென்னை சென்ட்ரல் பெங்களூரு அதி விரைவு ரயில் (12657) வரும் ஜூன் 5, 6, 7, 8, 11, 12, 13, 23, 28 ஜூலை 4, 7, 8ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

கர்நாடக மாநிலம் யஷ்வந்த் பூர்- சென்னை சென்ட்ரல் ரயில் (12291), வரும் ஜூன் 5, 12, ஜூலை 3ம் தேதிகளிலும், சென்னை சென்ட்ரல் யஸ் வந்த்பூர் அதி விரைவு ரயில் (12292) வரும் ஜூன் 6, 13, ஜூலை 4 தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

மைசூர்-சென்னை சென்ட்ரல் அதி விரைவு ரயில் (22681) வரும் ஜூன் 10ம் தேதியும். சென்னை சென்ட்ரல்- மைசூர் அதி விரைவு ரயில் (22682) வரும் ஜூன் 11-ம் தேதியும் ரத்து செய்யப்படும்.

கே.எஸ்.ஆர். பெங்களூரு- ஜோலார்பேட்டை, ஜோலார்பேட்டை- கே.எஸ். ஆர்.பெங்களூரு பயணிகள் ரயில்கள் (66550-66549) வரும் ஜூலை 7ம் தேதியன்று ரத்து செய்யப்படுகிறது.

ஜோலார்பேட்டை - கேஎஸ்ஆர் பெங்களூரு நகர் மெமு ரயில் (16519) பகுதி ரத்து செய்யப்படும்.

இதுதவிர, 12 ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட உள்ளன. இத்தகவல் தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளாம்பாக்கம் பஸ் முனையம் முன்பாக பஸ்கள் நிற்காது- அரசு போக்குவரத்து கழகம் தகவல்



**சென்னை, ஏப்.27:**
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பாக வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

போக்குவரத்துநெரிசலை தவிர்க்கும் பொருட்டு கிளாம்பாக்கம் பஸ் முனையம் முன்பாக சாலையில் பஸ்கள் நிற்காது.பயணிகள் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் இறங்கிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும்: மாணவர்களுக்கு நீதிபதி ஜெகதீஷ் சந்திரா அறிவுரை




புதுப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா, சரவணன் ஆகியோர்.

**கேளம்பாக்கம்,ஏப்.27**
புதுப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.


கேளம்பாக்கத்தை அடுத்த புதுப்பாக்கத்தில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், தமிழ்நாடு அரசு சட்டக்கல்வி இயக்குநர் கவுரி ரமேஷ் தலைமை வகித்தார். புதுப்பாக்கம் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் ஜெயகவுரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா. சரவணன் ஆகியோர் பங்கேற்று 600 இளங்கலை மாணவ, மாணவிகளுக்கும், 30 முதுகலை மாணவ, மாணவிகளுக்கும் பட்டங்களை வழங்கினர்.

அப்போது நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசியதாவது, வழக்கறிஞர் தொழில் உன்னதமானது. இத்தொழிலில் வழக்கறிஞர் பேசுவதற்கு முன்பாகவே அவர் எப்படி என்று மதிப்பீடு செய்து விடுவார்கள். எனவே தோற்றம், கம்பீரம் இவை அனைத்தும் முக்கியம். நீதிமன்ற வழக்கறிஞர் உடைக்கு மதிப்பு உண்டு. அதை எப்போதும் நாம் மரியாதையுடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.மரியாதை என்பது பலவீனம் அல்ல. அது ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய பலம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேசும் விதம், அமைதி, குரல் இவை உங்களின் திறமையை வெளிப்படுத்துகிறது. நீதிமன்றத்தில் நாம் குரலை உயர்த்தி பேசி வாதாடினால் ஜெயித்து விடுவோம் என்று எண்ணி விடாதீர்கள். அமைதியாக பேசி வாதாடி வெற்றி பெற்ற விஷயங்கள் அதிகம் உண்டு. சத்தமாக வாதாடினால் வெற்றி பெற முடியாது, சரியான முறையில் வாதாடினால் தான் வெற்றி பெற முடியும். கடந்த காலங்களை விட தற்போது உள்ள கால கட்டத்தில் சட்டக் கல்வி வேகமாக வளர்ந்து வருகிறது.

சட்டத்தை ஆழமாக படிக்க வேண்டும். தீர்ப்புகளை முழுமையாக வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் அதிகமாக வாதாடுவது கூட சில நேரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும்.எனவே துல்லியமாக, முக்கியமானதை சுருக்கமாக வாதாடினாலே வெற்றி தரும். நேர்மையாக. உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நீதிமன்றமும் நீதிபதிகளும் உங்களை நம்புவார்கள். பணம் படைத்தவர்களாக இருந்தாலும், எளியவர்களாக இருந்தாலும் மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். அனைவரையும் சமமாக மதிப்பது நற்பண்பு. இவ்வாறு அவர் கூறினார்.

பட்டறைப் பெரும்புதூர் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் கயல்விழி, பேராசிரியர்கள். அலுவலக பணியாளர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவில், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி இணைப் பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.

# பைகாரா ஏரியில் படகு போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க ஐகோர்ட் மறுப்பு




**நீலகிரி, ஏப்.27:**
கோடை சீசன் என்பதால் ஊட்டி பைகாரா ஏரியில் படகு போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுத்த கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி பைகாரா ஏரியில் படகு சவாரிக்கு பெட்ரோல், டீசலில் இயங்கும் இயந்திர படகுகள் பயன்படுத்தப்படுவதால் வனப்பகுதியில் ஒலி மாசு ஏற்பட்டு வனவிலங்குகள் பாதிக்கப்படு வதுடன், ஏரி நீரும் மாசடைந்து வருவதாக சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு அமர்வில் குற்றம்சாட்டப்பட்டது. இது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கும், சுற்றுலா வளர்ச்சி கழகத்துக்கும் நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

அதன்படி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் தாக்கல் செய்திருந்த அறிக்கையில், அடர்ந்த வனப் பகுதிகளுக்குள் படகு சவாரி செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும் சுற்றுச்சூழல் மாசுவை தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து கோவையில் உள்ள சலீம் அலி பறவையியல் கல்வி நிறுவனம் மற்றும் ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து பைகாரா ஏரியில் மோட்டார் இயந்திர படகுகளின் ஒலி அளவு, ஏரி நீரின் மாசு ஆகியவை குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றும் இதற்கான ஏற்பாடுகளை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செய்ய வேண்டுமென்றும் நீதிபதிகள் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தனர்.


இந்த வழக்கு நீதிபதிகள் என். சதீஷ்குமார், டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் கடந்த மாதம் விசாரணைக்கு வந்த போது பைகாரா ஏரி ஆய்வு தொடர்பாக எந்த அறிக்கையும் தாக்கல் செய்யப்பட வில்லை. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அதிகாரிகளும் ஆஜராகவில்லை. அதையடுத்து நீதிபதிகள் பைகாரா ஏரி தொடர்பான தங்களது முந்தைய உத்தரவை சம்பந்தப்பட்ட சலீம் அலி பறவை யியல் கல்வி நிறுவனம் மற்றும் மத்திய அரசின் மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி (ஐசிஏஆர்) நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க கோவை மற்றும் நீலகிரி மாவட்ட முதன்மை நீதிபதிகளுக்கு உத்தரவிட்டனர்.

அந்த உத்தரவுப்படி நிபுணர்களை நியமித்து அந்த நிறுவனங்கள் பைகாரா ஏரியை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றும், அதுவரை பைகாரா ஏரியில் பெட்ரோல், டீசலில் இயங்கும் இயந்திர படகுகளை இயக்கக் கூடாது என இடைக்காலத் தடை விதித்தும் விசாரணையை தள்ளிவைத்திருந்தனர்.

ரூ.40 லட்சம் வருவாய் இழப்பு: இந்நிலையில் இந்த வழக்கு இதே அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஏற்கெனவே பைகாரா ஏரியில் படகு போக்குவரத்துக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளதால் ரூ.40 லட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.தற்போது கோடை சீசன் என் பதால் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இடைக்காலத் தடையை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால் இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், பைகாரா ஏரியில் நீர் மாசு மற்றும் ஒலி மாசு தொடர்பான மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வக அறிக்கைக்காககாத் திருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என தெரிவித்து விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

## அகஸ்தீஸ்வரம் ஸ்ரீமுத்தாரம்மன் அம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா கொடியேற்றம்- விஜய் வசந்த் எம்பி பங்கேற்பு



**கன்னியாகுமரி, ஏப்.27:**
கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் இந்து நாடார் சமுதாய வகை அருள்மிகு குலசேகர விநாயகர் அறநிலையத்திற்குட்பட்ட திருக்கோவில்களில் சித்திரைப் பெருந்திருவிழா சித்திரை மாதம் 11-ம் தேதி முதல் 23- வரை (24-04-2026) முதல் (06-05-2026) வரை நடைபெறுகிறது.

அகஸ்தீஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் அம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா நேற்று காலை திருக்கொடியேற்றத்துடன் தொடங்கியது. காலை 4:00 மணிக்கு மஹா கணபதி ஹோமம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து காலை 7:30 மணிக்கு திருக்கொடியேற்றம் நடைபெற்றது. 10 நாட்கள் நடைபெறும்.

இந்த திருவிழாவில் அம்மனுக்கு தினமும் சிறப்பு பூஜைகள் பல்வேறு அலங்கார தீபாராதனை நடைபெறுகிறது . 8 ம் திருவிழா அன்று அம்மன் குதிரையில் பரிவேட்டை செல்லும் நிகழ்வும், நிறைவு நாளான 11 ம் திருவிழா அன்று பிற்பகல் 2 மணிக்கு அம்மன் பூத வாகனத்தில் ஊர்வலம் வரும் நிகழ்வும், மாலை 6:00 மணிக்கு ஊஞ்சல் உற்சவம் நடைபெறும்.

இந்த கொடியேற்ற நிகழ்வில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்பி, கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். மேலும் ஊர் பொதுமக்கள், பக்த கோடிகள் பலர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## தென்காசி அருகே அரசு பஸ் படிக்கட்டில் இருந்து தவறி விழுந்து மூதாட்டி பலி




தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள மேட்டூர் பகுதியை சேர்ந்தவர் சுப்பம்மாள் (வயது 70). இவர் நேற்று காலை மேட்டூரில் இருந்து நெல்லைக்கு செல்வதற்காக அங்குள்ள நிறுத்தத்தில் பஸ்சுக்காக வெகுநேரமாக காத்திருந்தார். இந்த நிலையில் அந்த வழியாக நெல்லை செல்லும் அரசு பஸ் ஒன்று வந்துள்ளது. உடனே அந்த பஸ்சில் மூதாட்டி சுப்பம்மாள் ஏறியுள்ளார். அப்போது வயது மூப்பு காரணமாக படிக்கட்டில் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டுள்ளார்.

ஒருவழியாக அவர் படிக்கட்டில் ஏறிடவே, அந்த நேரத்தில் டிரைவர் பஸ்சை இயக்கியதாக கூறப்படுகிறது. இதில் நிலை தடுமாறி மூதாட்டி சுப்பம்மாள் கீழே விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

தகவல் அறிந்து கடையம் போலீசார் அங்கு விரைந்து சென்று சுப்பம்மாள் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனிடையே விபத்து தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. மேலும் இந்த சி.சி. டி.வி. காட்சியை கைப்பற்றி கடையம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## டெல்லி விமான நிலையத்தில் விமானத்தின் எஞ்சின் தீப்பிடித்ததில் 6 பேர் படுகாயம்




**டெல்லி,ஏப்.27:**
டெல்லியில் இருந்து ஸ்விட்சர்லாந்தின் ஜுரிச் நகருக்கு புறப்பட்ட விமானத்தின் எஞ்சின் பழுதாகி தீப்பிடித்ததில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்

டெல்லி விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்படுவதற்காக ஓடுதளத்தில் வேகமெடுத்தபோது, அதன் எஞ்ஜின்களில் ஒன்று பழுதடைந்து தீப்பிடித்தது.

விமானத்தில் இருந்து கரும்புகையும், தீப்பிழம்புகளும் வெளியேறுவதை கண்டு ஊழியர்கள் அவசர கால வெளியேற்ற நடவடிக்கையைத் தொடங்கினர்

எமர்ஜென்சி பாதை யில் பயணிகள் வெளியேற்றப் பட்டனர். தீவிபத்து தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

# அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் சென்றால் குண்டர் சட்டம்: திருவள்ளூர் ஆட்சியர் எச்சரிக்கை




**திருவள்ளூர், ஏப்.27:**
ஆற்றுப்படுகைகள், அரசு புறம் போக்கு நிலங்களில் இருந்து உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்வோர் மீது குண்டர் சட்டம் பாயும் என ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: திருவள்ளூர் மாவட்டத்தில், ஆற்றுப் படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பட்டா நிலங்களில் இருந்து அரசின் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வெட்டி யெடுத்து, உரிய அனுமதி நடைச்சீட்டுயில்லாமல் கள்ளத்தனமாக வாகனங்களில் கடத்திச் செல்வது தொடர்பாக கடந்த 16ம் தேதி திருவள்ளூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களால் ஊத்துக்கோட்டை வட்டத்தில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், கனிமங்கள் (கிராவல் மற்றும் சாதாரண மண் ஏற்றிச் சென்ற 3 பாரஸ் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

எனவே, இதுபோன்ற வாகனங்களை கண்காணிக்க தொடர் தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளு மாறு வருவாய்த் துறை, கனிம வளத்துறை, காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கைமேற்கொள்வதுடன், இக்குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபடு வோரைக் கண்காணித்து அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு ஆட்சியர் பிரதாப் கூறியுள்ளார்.



































திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555







WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451




WANTED
LAB HELPER
OFFICE BOY
GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451

# கவிதை அரங்கம்!





உன்னை நேசிப்பதில்
எனக்கு எந்தக் களைப்பும்
இல்லை, அது என்
அன்றாடக் கடமை.


என் உலகின் மையம் நீ,
உன்னைச் சுற்றியே என்
காலங்கள் நகர்கின்றன.

நாம் பேசாத நொடிகள்
ஒவ்வொன்றும், என்
நாட்குறிப்பில் வெறும்
வெற்றுப் பக்கங்கள்.

காதலின் ஆழத்தை
அளக்க முடியாது,
அதை உன்னிடம்தான்
கற்றுக்கொண்டேன்.

உன் மடியில் தலை
சாய்த்து உறங்குவதே என்
வாழ்வின் ஆகச்சிறந்த
வரம்.

## வாழ்க்கை தத்துவம்...



காயப்பட்ட உள்ளம் பல உண்மைகளைக் கற்றுக்கொள்ளும்.

பிரிவுகள் நிரந்தரமல்ல; நினைவுகள் மட்டுமே நிலையானவை.

உண்மையான நட்பு ஆபத்தில் கை கொடுக்கும்.

பணம் மற்றும் பொருள்
பணம் வாழ்க்கைக்குத் தேவை, ஆனால் அதுவே வாழ்க்கை அல்ல.

பேராசைப் படுபவன் இருப்பதை இழக்கிறான்.

சிக்கனம் சீரளிக்கும் என்றாலும், சேமிப்பு தேவையானது.

# திகில் அல்ல தியாகமே !!

ஸ்வீட்டி!! இன்னிக்கு டின்னர் வெளில.. நான் வர லேட்டாகும்.. நீ சாப்பிட்டு தூங்கிடு மா.. என்கிட்ட ஒரு சாவி இருக்கு என்ன.. என்ற கணவனிடம், "சரிங்க" என்று சிணுங்கி விட்டு திரும்பியவள்

"பயங்கர பசி மா.. சாப்பிட என்ன இருக்கு" என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தவனைப் பார்த்து அதிர்ந்தாள்...

ஆமாம் வந்தவன் பிரதீப் . மதுரிமாவின் கணவன் சஞ்சய்யுடைய சஞ்சயுடைய பெரியப்பா மகன் .

மதுரிமாவும் சஞ்சய்யும் நிச்சயதார்த்தம் முடிந்த பின் ஓரிரு முறை காபி ஷாப்பில் அமர்ந்து பேசி கொண்டிருந்த போது அங்கு வந்து பேசினான் .அப்போது சஞ்சய் கோபத்துடன் முகம் திருப்பி கொண்டு அங்கிருந்து மதுரிமாவை கூட்டி கொண்டு வேறு ஹோட்டலுக்கு சென்று விட்டான் .

அப்போது பிரதீப்பை பற்றி கூறினான் . 15 வயதிருக்கும் போதே காதல் விவகாரத்தில் சிக்கி , ஒரு பெண்ணை கூட்டி கொண்டு ஓடி விட்டான். அக்கா கல்யாணத்திற்கு வைத்திருந்த பணத்தை எடுத்து கொண்டு , கூட்டு குடும்பத்தில் இருந்த தன் தந்தை நிலம் வாங்க வைத்திருந்த பணத்தையும் திருடி கொண்டு ஓடி விட்டதாக சொன்னார்கள். பின்னரும் ஏதோ ஒரு காரணம் கூறி அவர் பெரியம்மாவை ஏமாற்றி அவ்வப்போது பணம் வாங்கி சென்றதாக வேறு கூறி கோபமாக சொல்லி கொண்டிருந்தது ஞாபகம் வந்தது .

அதிலும் கடைசியாக சஞ்சயின் பெரியம்மா இறந்த போது செத்த வீட்டில் கூட இந்த பிரதீப் பணம் திருடியதாக , அதை சஞ்சயின் சித்தி கையும் களவுமாக பிடிபட்டதாகவும் கூறி அதுதான் கடைசியாக நாங்கள் பிரதீப்பை பார்த்தது . அவன் ஒரு கிரிமினல் என்று கூறி விட்டான்

அதிலிருந்து மொத்தமாக குடும்பம் அவனை ஒதுக்கி விட்டது.

அதனால் நீ அவனை எங்காவது பார்த்தால் கூட நகர்ந்து விடு . என் உறவென்று கூறி உன்னிடம் ஏதாவது ஏமாற்றி விட போகிறான் என்று சொல்லி இருந்தான் சஞ்சய் . கணவன் கூறியதை நினைவு கூர்ந்து அச்சச்சோ ...அந்த பிரதீப் இங்கு வந்து இருக்கான் !!!! எப்படி ?

பூட்டிய கதவை எப்படி திறந்து கொண்டு வந்தான் ?

அச்சச்சோ நான் இப்போது என்ன செய்வேன் என ஒரு நிமிடம் மதுரிமா மிக கலங்கி , பயந்து , மனம் எதிலும் ஒட்டாமல் PRESENCE OF MIND தொலைந்தார் போன்றே நினைத்தாள் !!!

அந்த நேரம் சட்டென்று ஒன்றும் பேசாமல் பக்கத்தில் உள்ள ரூமிற்கு சென்று கதவை சாற்றி கொண்டாள் . உதவிக்கு தங்கை அம்ரிதாவை கூப்பிடலாம் என்று போனை கையில் எடுக்கும் போது அவளது தங்கையே போனில் கூப்பிட்டாள் .

அம்ரிதா எனக்கு பயமாக உள்ளது என்று நடுங்கிய குரலில் மதுரிமா தங்கையிடம் கூறினாள் .அப்போது இங்கே திடீர்னு என் கணவரின் ஒரு உறவுக்கார கிரிமினல் பிரதீப் வந்து பசி என்கிறான் என்று கூறி , எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றாள் .

அரசாங்க சிறையின் மருத்துவமனையில் நர்ஸாக பிஸியோதெரபிஸ்டாக இருக்கும் தங்கை மதுரிமாவிடம் பயப்படாதே .... மனிதாபிமானபடி முதலில் நீ இருக்கும் இடத்தில இருந்தே அவனை டைனிங் டேபிளில் இருக்கும் சாப்பாடை சாப்பிட சொல் ...பசி என்று தானே கேட்கிறான் , சமாளி அதற்குள் நான் வருகிறேன் என்று கூறினாள் .

20 நிமிடங்களில் அங்கு வந்த அம்ரிதா பிரதீப்பை பார்த்து அதிர்ந்தாள் ...ஏனெனில் அம்ரிதாவின் CLASSMATE கணவன்தான் இந்த பிரதீப் . உண்மையில் பிரதீப் ஒரு தவறும் செய்யாதவன் . அம்ரிதாவின் தோழி சந்தியாவை அவர்கள் பள்ளி லேப் ATTENDER கெடுத்து விட்டான் அவள் SUCIDE அட்டெம்ப்ட் பண்ணிய போது சீனியர் ஸ்டுடென்ட்டான பிரதீப் அவளை காப்பாற்றியதோடு அல்லாமல் அவளுக்கு வாழ்வளித்து , வேறொரு ஊருக்கு அழைத்து சென்று தான் கெட்ட பெயர் வாங்கி அவளது குழந்தைக்காக டிரைவர் வேலை பார்த்து கொண்டு இருக்கிறான் . நிச்சயம் அவனது அம்மா இருக்கும் வரை தாயின் உதவியோடு நிம்மதியும் இருந்தது பிரதீப்பிற்கு . அவனது குடும்பம் அவனை ஒரு ரௌடியாக சித்தரித்து வாழ்க்கையை அழித்து விட்டது . உண்மையில் பிரதீப் நல்லவன் என்றாள் அம்ரிதா .

மதுரிமாவிற்கு ஆச்சர்யம் சந்தேகம் எல்லாம் இருந்தது ...பிரதீப்பை பார்த்து பூட்டி இருந்த வீட்டில் வந்தது எப்படி என்றாள் ?

சிஸ்டர் ...நீங்கள் பூட்டவே இல்லை நான் சவாரி ஏற்றி வந்தவரை பக்கத்து வீட்டில் இறக்கி விட்டு திரும்பும் போது உங்கள் கணவருக்கு நீங்கள் கையசைத்து உள்ளே வந்ததை பார்த்து , உங்கள் மூலமாவது என்னை பற்றி கூறலாம் என்று வந்தேன் ....கதவை தட்ட தொடும் போது தானே திறந்து கொண்டது ...உங்கள் கவனம் ஈர்க்கவே பசி என்றேன் !!!

அம்ரிதா தன் தோழியின் போட்டோவை மொபைலில் காண்பித்து பிரதீப் அவளது குழந்தை ஜானகி படத்தையும் காண்பித்து அனைத்தும் கூறினாள் . அவளை கெடுத்து சீரழித்த லேப் அட்டெண்டர் ஒரு ACCIDENT இல் இறந்ததால் தன தோழி கவிதாவிற்கு பிரதீப் கணவனானான் .

பிரதீப் வாழ்க்கை நிஜத்தில் குற்றத்தில் அல்ல தியாகத்தில் என்பதை அம்ரிதா மூலம் அறிந்த மதுரிமா சஞ்சயிடம் கூறி உறவை சேர்த்ததை கூறவும் வேண்டுமோ !!!

திகில் அல்ல தியாகமே !!

செல்லம் சேகர்

(முற்றும்)



முகில் தினகரன்
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: ஒரு கொசு 'தற்கொலை' பண்ணிக்கணும்னா என்ன பண்ணும்?
பதில்: 'ஆல்-அவுட்' (ALL-OUT) பாட்டிலை எடுத்து குடிக்கும்!

கேள்வி: ஒரு பேனாவுக்கும் பென்சிலுக்கும் சண்டை வந்தா யாரு ஜெயிப்பா?
பதில்: பேனா தான் ஜெயிக்கும். ஏன்னா, பென்சிலுக்கு தான் 'முனை' (POINT) இல்லையே!



# தினம் ஒரு சமையல்



## கீமா மசாலா

**தேவையான பொருட்கள்:**

சிக்கன் கீமா (கொத்திய கறி) - 200 கிராம்
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1
தக்காளி - 1
இஞ்சி பூண்டு விழுது - 1 ஸ்பூன்
மிளகாய்த்தூள் - 1 ஸ்பூன்
மல்லித்தூள் - 1/2 ஸ்பூன்
கரம் மசாலா - 1/2 ஸ்பூன்
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை
நறுக்கிய மல்லித்தழை & கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**தோசைக்கு:**


தோசை மாவு - தேவையான அளவு
முட்டை - 1 அல்லது 2 (விருப்பப்பட்டால்)
மிளகுத் தூள் - சிறிதளவு



**செய்முறை:**

கீமா மசாலா தயார் செய்தல்
ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், சோம்பு (விருப்பமெனில்) தாளித்து வெங்காயத்தைச் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.
இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.
பின் தக்காளி மற்றும் உப்பு சேர்த்து குழைய வதக்க வேண்டும்.
மசாலாத் தூள்கள் (மிளகாய், மல்லி, மஞ்சள், கரம் மசாலா) சேர்த்து வதக்கி, சுத்தம் செய்த சிக்கன் கீமாவைச் சேர்க்கவும்.
தண்ணீர் அதிகம் ஊற்றாமல் சிக்கனில் வரும் நீரிலேயே மசாலாவை வேகவிடவும். ஈரப்பதம் குறைந்து மசாலா கெட்டியாக (DRY) வந்தவுடன் மல்லித்தழை தூவி இறக்கவும்.

## திப்பிலி பயன்கள்



திப்பிலி (LONG PEPPER) என்பது ஒரு மிகச்சிறந்த மருத்துவ குணங்கள் கொண்ட மூலிகையாகும். 'சுக்கு, மிளகு, திப்பிலி' ஆகிய மூன்றும் சேர்ந்த 'திரிகடுகம்' சித்த மருத்துவத்தில் மிக முக்கியமானது.

திப்பிலியின் முக்கிய பயன்கள் மற்றும் அதனைப் பயன்படுத்தும் முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. சளி மற்றும் இருமல் நிவாரணி
திப்பிலி சுவாசப் பாதையில் உள்ள அடைப்புகளை நீக்க வல்லது.
பயன்பாடு: திப்பிலிப் பொடியை தேனுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் தீராத இருமல், சளி, ஆஸ்துமா மற்றும் தொண்டைக்கட்டு குணமாகும்.

2. செரிமான மண்டலம் மேம்பட
வயிற்று உப்புசம், பசியின்மை மற்றும் அஜீரண கோளாறுகளுக்கு இது ஒரு சிறந்த மருந்து.
பயன்பாடு: மிளகு மற்றும் திப்பிலியை வறுத்துப் பொடி செய்து உணவில் சேர்த்து வந்தால் ஜீரண சக்தி அதிகரிக்கும்.

3. காய்ச்சல் மற்றும் உடல் வலி
தொடர் காய்ச்சல் மற்றும் உடல் அசதியைக் குறைக்க திப்பிலி உதவுகிறது.
பயன்பாடு: திப்பிலியைப் பாலில் வேகவைத்து, அந்தப் பாலைக் குடிப்பதன் மூலம் காய்ச்சலால் ஏற்படும் உடல் வலி குறையும்.

4. தூக்கமின்மை (INSOMNIA)
இரவில் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்களுக்கு திப்பிலி ஒரு சிறந்த தீர்வு.
பயன்பாடு: சிறிதளவு திப்பிலிப் பொடியை வெல்லத்துடன் கலந்து அல்லது பாலில் கலந்து படுக்கைக்குச் செல்லும் முன் குடித்தால் ஆழ்ந்த உறக்கம் வரும்.

5. பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள்
மாதவிடாய் காலங்களில் ஏற்படும் அதிகப்படியான வலி மற்றும் வயிற்று உபாதைகளைக் குறைக்க திப்பிலி பயன்படுகிறது.

# மீண்டும் ரஜினி - ஷங்கர் கூட்டணி! தலைவர்173ல் இந்த ட்விஸ்ட் யாரும் எதிர்பார்க்கலையே




சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் அடுத்த படம் பற்றி பல்வேறு தகவல்கள் உலா வந்து கொண்டிருக்கிறது. தலைவர் 173 என தற்காலிகமாக அழைக்கப்பட்டு வரும் இந்த படத்தை கமலின் ராஜ்கமல் நிறுவனம் தான் தயாரிக்கிறது.

மேலும் இந்த படத்தை சிபி சக்ரவர்த்தி இயக்குவார் என கூறப்பட்ட நிலையில், அவருக்கு பதிலாக அஸ்வத் மாரிமுத்து இயக்க போவதாகவும் ஒரு தகவல் பரவி வருகிறது.

இந்நிலையில் ஒருவேளை சிபி சக்ரவர்த்தி ரஜினியின் 173 படத்தை இயக்கினால் அதில் வில்லனாக பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் நடிக்க போகிறாராம்.

ஷங்கரின் முந்தைய படங்கள் எல்லாம் பெரிய தோல்வியாக மாறிய நிலையில் அவர் நடிப்பில் களமிறங்க போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இருப்பினும் ரஜினி 173 படத்தின் இயக்குனர் மாற்றப்பட்டு அஸ்வத் இயக்குனராக ஒப்பந்தம் ஆனால் அதில் ஷங்கர் நடிக்க வாய்ப்பு இல்லை என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.



கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன. இதோ அந்த போட்டோஷூட்:




# ஹைதராபாத்தில் பிரம்மாண்டமாக வீடு கட்டும் அல்லு அர்ஜுன்.. மதிப்பு மட்டும் எவ்வளவு தெரியுமா?



தெலுங்கு சினிமாவில் முன்னணி ஹீரோவாக, ரசிகர்களால் பான் இந்தியன் ஸ்டாராக கொண்டாடப்பட்டு வருபவர் அல்லு அர்ஜுன். இவர் நடிப்பில் கடைசியாக வெளியான புஷ்பா 2 திரைப்படம் உலகளவில் ரூ. 1625 கோடிக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்தது.

இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து தற்போது இயக்குநர் அட்லீ இயக்கத்தில் உருவாகி வரும் ராக்கா திரைப்படத்தில் அல்லு அர்ஜுன் நடித்து வருகிறார். இப்படம் அடுத்த ஆண்டு திரைக்கு வரவுள்ள நிலையில், எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர் அல்லு அர்ஜுன் தெலுங்கு சினிமாவில் உள்ள பணக்கார நடிகர்களில் ஒருவர் ஆவார். இவருடைய மொத்த சொத்து மதிப்பு ரூ. 460 கோடி ஆகும்.


இந்த நிலையில், ஹைதராபாத்தில் 4,000 சதுர அடியில் பிரம்மாண்டமாக புதிய வீடு ஒன்றை அல்லு அர்ஜுன் கட்டி வருகிறாராம். இந்த வீட்டின் மதிப்பு ரூ. 80 கோடி முதல் ரூ. 100 கோடி வரை இருக்கும் என்கின்றனர். ஹைதராபாத்தில் ஜூபிலி ஹில்ஸில் நடிகர் சிரஞ்சீவியின் வீட்டிற்கு அருகே, இந்த புதிய வீட்டை அல்லு அர்ஜுன் கட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

























## WANTED

**ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN**

EGMORE, MOUNT ROAD

CALL US
7550093245 / 7358696451



## மேற்கு வங்காளத்தில் 5 போலீஸ் அதிகாரிகள் சஸ்பெண்ட்

புதுடெல்லி, ஏப்.27:

294 தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காள சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி 152 தொகுதிகளுக்கு முதல் கட்டமாக நேற்று முன்தினம் (23-ந்தேதி) வாக்குப்பதிவு நடைபெற்றது. 92.7 சதவீத வாக்குகள் பதிவானது.இந்த நிலையில் மேற்கு வங்காளத்தில் தேர்தலின் போது நடுநிலை தவறியதாக 5 போலீஸ் அதிகாரிகள் மீது தலைமை தேர்தல் ஆணையம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சந்தீப் கராய், உட்கோட்ட போலீஸ் அதிகாரி சஜல் மண்டல், பொறுப்பு இன்ஸ்பெக்டர்கள் மவுஷம் சக்கரவர்த்தி, அஜய் பக் மற்றும் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி சுபேச்சா பக் ஆகிய 5 போலீஸ் அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டதாகவும், நடுநிலை தவறியதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## 7 எம்.பிக்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்: மாநிலங்களவை தலைவருக்கு ஆம் ஆத்மி கடிதம்

புதுடெல்லி, ஏப்.27:




ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும், அந்தக் கட்சியின் மேல்சபை துணைத் தலைவர் ராகவ் சத்தாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இதனால் ஆம் ஆத்மி மேல்சபை எம்.பி.க்கள் குழு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா சமீபத்தில் நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து கட்சி தலைமையின்மீது அவர் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்தார். இந்த நிலையில் ராகவ் சத்தா, சந்தீப் பாடக், அசோக் மித்தல், சுவாதி மாலிவால், ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் ஷைனி ஆகிய 7 மேல்சபை எம்.பி.க்கள் ஆம் ஆத்மி கட்சியில் இருந்து திடீரென விலகினர். அவர்கள் பா.ஜ.க.வில் இணைகிறார்கள்.

மேல்சபையில் ஆம் ஆத்மி கட்சிக்கு 10 எம்.பி.க்கள் உள்ளனர். அதில் 3-ல் இரண்டு பங்கு எம்.பி.க்கள் கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான ஆவணத்தை மேல்சபை தலைவரிடம் அவர்கள் அளித்துள்ளனர். இந்த தகவலை ராகவ் சத்தா தெரிவித்தார்.7 மேல்சபை எம்.பி.க்களும் பா.ஜ.க.வில் இணைவதற்கான கடிதம் மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் அளிக்கப்பட்டது.

இதனிடையே, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் சிங் மாநிலங்களவை தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், கட்சியை விட்டு வெளியேறிய 7 எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

கட்சித் தாவல் தடுப்பு சட்டம் தெளிவாகக் கூறுவது என்னவெனில், மாநிலங்களவை மற்றும் மக்களவையில் ஏற்பட முடியாது. எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தாலும் கூட சட்டரீதியான அங்கீகாரம் எதுவும் கிடைக்காது" என்று தெரிவித்துள்ளார்.

## திருப்பதி ஏழுமலையானுக்கு 753 கிராம் எடையில் தங்க ஆபரணங்கள் காணிக்கை

திருப்பதி, ஏப்.27:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருசை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். ஒருநாள் உண்டியல் காணிக்கை மட்டும் ரூ.3 முதல் 4 கோடி பக்தர்கள் வழங்குவர்.

இந்த நிலையில், பெங்களூரைச் சேர்ந்த பக்தர் எம். மகாதேவம்மா என்பவர் திருப்பதி ஏழுமலையானுக்கு 753 கிராம் எடையில் ரூ.94 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான 7 தங்க ஆபரணங்களை காணிக்கையாக வழங்கினார்.

கோவிலில் உள்ள ரெங்கநாயகர் மண்டபத்தில் அந்தத் தங்க ஆபரணங்களை கோவில் செயல் அலுவலர் முத்தாடா. ரவிச்சந்திரா. கூடுதல் அதிகாரி வெங்கையா சவுத்ரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## தெலுங்கானாவில் புதிய கட்சியை தொடங்கினார் கவிதா



ஐதராபாத், ஏப்.27:

தெலுங்கானா மாநில முன்னாள் முதல்-மந்திரியும், பாரத ராஷ்டிர சமிதி(பி.ஆர்.எஸ்.) கட்சி தலைவருமான சந்திரசேகர ராவின் மகள் கவிதா. இவர் முன்னாள் எம்.பி. ஆவார். காலேஸ்வரம் நீர்ப்பாசன திட்டத்தில், தனது தந்தையின் நற்பெயரை கெடுத்ததாக தனது உறவினர்கள் ஹரிஷ் ராவ், சந்தோஷ் குமார் ஆகியோர் மீது கவிதா குற்றம் சாட்டியதையடுத்து அவர் பாரதராஷ்டிர சமிதியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

பின்னர், தனது எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்த கவிதா,'தெலுங்கானா ஜக்ருதி' என்ற கலாசார அமைப்பை தொடங்கி, பொதுப்பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வருகிறார். இதற்கிடையில் தெலுங்கானா ஜக்ருதியை அரசியல் கட்சியாக மாற்றுவது குறித்து முன்னாள் தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோருடன் கவிதா ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

சமீபத்தில், தெலுங்கானாவின் பிரச்சினைகளை மையமாக கொண்டு இயங்கும் வகையில் இரு அரசியல் கட்சியை தொடங்கப்போவதாக கவிதா அறிவித்தார். இதன்படி, வரும் ஏப்ரல் 25-ந்தேதி காலை 10 மணிக்கு ஐதராபாத் அருகே முனீர்பாத் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் தனது புதிய கட்சியின் அதிகாரப்பூர்வ பெயர் மற்றும் கொடியை அறிமுகம் செய்ய உள்ளதாக கவிதா தெரிவித்துள்ளார். இந்த நிலையில், ஐதராபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் "தெலுங்கானா ராஷ்ட்ர சேனா" (TRS) என்ற பெயரில் புதிய கட்சியை கவிதா இன்று தொடங்கினார். சகோதரர் கே.டி.ராமாராவ் ஆதரவாளர்களுக்கு சவால் விடுக்கும் வகையில் புதிய கட்சியை கவிதா தொடங்கி உள்ளார்.

## "ஆம் ஆத்மி சரியான திசையில் சென்றிருந்தால்..." 7 எம்பிக்கள் விலகல் பற்றி ஹசாரே கருத்து

புதுடெல்லி, ஏப்.27:



ஆம் ஆத்மி கட்சி சரியான திசையில் சென்றிருந்தால் ராகவ் சத்தா உள்ளிட்ட 7 எம்பிக்கள் கட்சியை விட்டு விலகி இருக்க மாட்டார்கள் என்று சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் அஹில்யா நகர் மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே, "ஜனநாயகத்தில் அரசியல் முடிவுகளை எடுக்கும் உரிமை ஒவ்வொரு நபருக்கும் உண்டு. அவர்கள் ஏன் கட்சியை விட்டு வெளியேற வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள் என்பது குறித்து கட்சித் தலைமை (அரவிந்த் கேஜ்ரிவால்) ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. அவர்கள் ஏதோ சிரமத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.

கட்சித் தலைமையின் தவறுதான் இதற்குக் காரணம். கட்சி சரியான திசையில் சென்றிருந்தால் அவர்கள் கட்சியை விட்டு விலகியிருக்க மாட்டார்கள். கட்சியை விட்டு விலகும் அவர்களின் முடிவுக்குப் பின்னால் உள்ளார்ந்த காரணங்கள் இருக்கும்.

அந்தக் காரணங்களை பரந்த ஜனநாயக சூழலின் பின்னணியில் பார்க்க வேண்டும். எங்கிருந்து வெளியேற வேண்டும், எங்கே செல்ல வேண்டும் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவு" என தெரிவித்தார்.

## கேரளாவில் கடும் வெப்பம்: ஊரடங்கு போன்ற முன்னெச்சரிக்கையை கடைபிடிக்க அறிவுறுத்தல்

திருவனந்தபுரம், ஏப்.27:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் கடந்த சில தினங்களாக கடுமையான வெப்பம் நிலவி வரும் நிலையில், வெப்பநிலை மேலும் உயரக்கூடும் என பேரிடர் மேலாண்மை ஆணயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 38 முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் உயரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இயல்பை விட அதிக வெப்பநிலை நீடிப்பதால் பகல் நேரங்களில் மக்கள் ஊரடங்கு போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளை தவிர்த்து, பிற காரணங்களுக்காக பொதுமக்கள் வெளியே செல்வதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே போல், காலை 11 மணி முதல் 3 மணி வரை பொதுமக்கள் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் என சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

## இந்திய வானிலை மைய இணையத்தில் முதன்மை மொழியாக இந்தி மாற்றம்




புதுடெல்லி, ஏப்.27:

தமிழகத்தில் இந்தி திணிப்பு குறித்து அவ்வப்போது எதிர்க்கட்சிகள் சார்பில் குரல்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில், மத்திய அரசின் திட்டங்கள், மற்றும் வலைதளங்களில் இந்தி மொழியில் மாற்றம் செய்யப்படுவது தொடர்ந்து வருகிறது. அந்த வகையில் தற்போது இந்திய வானிலை ஆய்வுமையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த வலைதளத்தில் தற்போது இந்திய வானிலை ஆய்வுமையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

இந்த இணையதளத்தின் முதன்மை மொழியாக ஆங்கிலம் இருந்த நிலையில், தற்போது இந்திக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது, முதலில் இணையதளத்தின் உள்ளே செல்லும்போது. இந்தியில் இருக்கும். அதன்பிறகு தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் மாற்றிக்கொள்ளும் வசதி உள்ளது. வானிலை மையத்தின் முதன்மை மொழி இந்திக்கு மாற்றப்பட்டு உள்ள இந்த திடீர் நிகழ்வு தென் மாநிலங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## விஜயவாடா: வெயிலின் தாக்கத்தை சமாளிக்க நூதன முயற்சியில் இறங்கிய மாநகராட்சி

அமராவதி, ஏப்.27:



ஆந்திராவில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பகல் நேரங்களில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வருகிறது. வெப்பத்தில் இருந்து தங்களை தற்காத்துக்கொள்ள மக்கள் இளநீர், குளிர்பான கடைகளை நாடி வருகின்றனர்.

இந்த நிலையில் ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததை தொடர்ந்து, வெப்பத்தின் கொடுமையை சமாளிக்கவும், சாலைகளின் வெப்பத்தை குறைக்கவும் ஆண்டி-ஸ்மோக் கன் மூலம் தண்ணீர் தெளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விஜயவாடா மாநகராட்சி, கடும் கோடை வெயிலில் இருந்து பொதுமக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் தெளிக்கப்பட்டது இதனால் மக்கள் சாலையில் சிரமமின்றி சென்றனர்.

சாலைகள் மற்றும் காற்றில் உள்ள வெப்பத்தை குறைத்து, வெப்பத்தின் தாக்கத்திலிருந்து நிவாரணம் அளிப்பதே இதன் நோக்கமாக கருதப்படுகிறது.

## வீட்டு வேலை செய்வதாக கூறி நுழைந்த பெண்... முதியவருக்கு மயக்க மருந்து கொடுத்து கொலை

காந்திநகர், ஏப்.27:




குஜராத் மாநிலம் அகமதாபாத் பகுதியில் உள்ள தரியாபூர் பகுதியில் 81 வயதான அப்துல்பாய் இஸ்மாயில் என்பவர் தனது மனைவியுடன் வசித்துவந்தார். இந்நிலையில், சம்பவத்தன்று அப்துல்பாய் வீட்டிற்கு வந்த லதாபென் (வயது 55) என்ற பெண், தனக்கு வேலை வேண்டும் எனவும், சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்து கொடுப்பதாகவும் கூறியுள்ளார்.

அந்த பெண்ணை நம்பி அப்துல்பாய் அவரை வீட்டுக்குள் நுழையவிட்டுள்ளார். வீட்டுக்குள் நுழைந்த லதாபென், வீட்டு வேலைகளை செய்வதுபோல் நடித்துள்ளார். சிறிது நேரம் கழித்து, வீட்டில் இருந்த முதியவர்கள் இருவருக்கும் அவர் லஸ்ஸி போட்டுக் கொடுத்துள்ளார். அதில் மயக்க மருந்தை லதாபென் கலந்துள்ளார்.

அந்த லஸ்ஸியை குடித்த அப்துல்பாயும், அவரது மனைவியும் சிறிது நேரத்தில் மயக்கமடைந்தனர். இதையடுத்து வீட்டில் இருந்த பணம், நகைகள் உள்ளிட்டவற்றை திருடிக்கொண்டு லதாபென் அங்கிருந்து தப்பியோடினார். மயக்கமடைந்து கிடந்த முதியவர்கள் இருவரையும் அக்கம்பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

முதியவர் அப்துல்பாய்க்கு ஏற்கனவே பல்வேறு உடல்நல பிரச்சினைகள் இருந்து வந்த நிலையில், மயக்க மருந்தை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால், அவர் சிகிச்சை பலனளிக்காமல் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது மனைவி மருத்துவ மனைவியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், சி.சி. டி.வி. காட்சிகளை வைத்து குற்றவாளி லதாபென்னை தேடிப்பிடித்து அதிரடியாக கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர் மீது ஏற்கனவே திருட்டு, சட்டவிரோத சூதாட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பான வழக்குகள் பதிவாகியிருந்தது தெரியவந்தது.

மேலும், தனியாக வசித்து வரும் முதியவர்களை குறிவைத்து பணம், நகை உள்ளிட்டவற்றைதிருடுவதை அவர் வாடிக்கையாக கொண்டுள்ளார் எனபோலீசார் தெரிவித்தனர். லதாபென் மீது கொலைவழக்குப்பதிவு செய்த போலீசார், அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## ஈரான் போர்: பெட்ரோல் விலை கடுமையாக உயரும்: ராகுல் காந்தி

புதுடெல்லி, ஏப்.27:

ஈரான்போரால் எண்ணெய் மற்றும் பெட்ரோலின் விலை கடுமையாக உயரும் என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்ட நிலையில், முதல்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 23 அன்று நடைபெற்றது.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 29 அன்று நடைபெற உள்ளது. கடைசிகட்ட தேர்தல் பிரசாரம் வரும் ஏப்ரல் 27 அன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற உள்ளது.

இந்த நிலையில், மேற்கு வங்கம், தெற்கு 24 பர்கானாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி பேசியதாவது;

"பாஜகவும், பிரதமர் மோடியும் சேர்ந்து ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் தாக்குகின்றனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) மூலம் அவர்கள் வாக்குகளைத் திருடி முயற்சிக்கின்றனர். இதை அவர்கள் நாடு முழுவதும் செய்கின்றனர். மகாராஷ்டிரம், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் ஏற்கெனவே, இதுபோன்ற வழிகளில் அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். அதேபோல, மேற்கு வங்கத்திலும் வெற்றி பெற முயற்சிக்கின்றனர்.

நாட்டின் விவசாயிகள் விற்கப்பட்டுவிட்டனர். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விற்கப்பட்டுவிட்டன. நம்முடைய தரவுகள் விற்கப்பட்டுவிட்டன. நாட்டின் ஒட்டுமொத்த எரிசக்தி பாதுகாப்பும் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

உங்களுக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அமெரிக்காவைக் கலந்தாலோசிக்காமல் இந்தியா வேறு யாரிடமும் எண்ணெய் வாங்க முடியாது.

ஈரான், ரஷியா, சௌதி அரேபியா மற்றும் வெனிசுவேலா போன்ற எந்த நாடுகளிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்க வேண்டுமென்றாலும் முதலில் அமெரிக்காவிடம் அனுமதி வாங்க வேண்டும். ஈரானில் போர் நடைபெற்று வருகிறது.

வரும் மாதங்களில் எண்ணெய் மற்றும் பெட்ரோல் விலை கடுமையாக உயரும் என்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று பேசினார்.

## கோடை வெப்பத்தை தணிக்க போக்குவரத்து காவலர்களுக்கு குளிரூட்டும் ஜாக்கெட் - குஜராத்தில் புதிய முயற்சி



காந்திநகர், ஏப்.27:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில், நாள் முழுவதும் வெயிலில் நின்றுபணியாற்றும் போக்குவரத்து காவல்துறையினரை வெயிலின் தாக்கத்தில் இருந்து காப்பதற்காக குஜராத்தில் புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, பணியில் இருக்கும்போது, கடுமையான கோடை வெப்பத்தைச் சமாளிக்க போக்குவரத்து காவலர்களுக்கு உதவும் வகையில், அகமதாபாத் போக்குவரத்து காவல்துறை உயர் தொழில்நுட்ப குளிரூட்டும் ஜாக்கெட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் பேட்டரியால் இயங்கும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த ஜாக்கெட்டுகள் மிகவும் பயனுள்ளதாகவும், உடல் வெப்பநிலையைக் குறைத்து, வெப்பத்தால் ஏற்படும் உடல் சோர்வைப் போக்க உதவுவதாகவும் போக்குவரத்து காவலர்கள் தெரிவிக்கின்றனர்.




## சென்னை: போலீஸ் உடையில் வந்து பழக்கடை ஊழியரிடம் ரூ.14 லட்சம் பறிப்பு

**வேலூர், ஏப்.27:** வேலூர் மாவட்டம், பேர் ணாம்பட்டு பகுதியைச் சேர்ந் தவர் தர்ஷீர் (26). இவர் சென்னை, கோயம்பேடு மார்க் கெட்டில் உள்ள ஒரு பழக்கடையில் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். நேற்று முன் தினம் இரவு தர்ஷீர் கடையில் இருந்தபோது, அதன் உரிமையாளர் ஷேக் ரோஷன் என்பவர் அவரைத் தொடர்பு கொண்டு, தான் தற்போது வானகரத்தில் இருப்பதாகவும், கடையில் உள்ள ரூ.14 லட்சம் ரொக்கப் பணத்தை எடுத்துக்கொண்டு உடனடியாக அங்கு வருமாறும் கூறியுள்ளார்.

முதலாளியின் உத்தரவின் படி, தர்ஷீர் பணப் பையுடன் ஆட்டோவில் வானகரம் சென்றார். ஆட்டோ நெற்குன்றம் தயாசதன் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்த போது, அங்கு போலீஸ் சீருடையில் இருந்த 2 பேர் ஆட்டோவை வழிமறித்தனர்.

போக்குவரத்து காவலர்கள் போலத் தோற்றமளித்த அவர்கள், ஆட்டோ ஓட்டுநரிடம் ஆவணங்களைச் சரிபார்ப்பது போல நடித்துள்ளனர். பின்னர், ஆட்டோவில் இருந்த தர்ஷீரிடம், “பையில் என்ன இருக்கிறது ?” என்று கேட்டுள்ளனர். தர்ஷீர் தன்னிடம் பணம் இருப்பதாகக் கூறியவுடன். ஒரு காவலர் அவரிடமிருந்த ரூ.14 லட்சம் பணப்பை மற்றும் செல்போனைப் பறித்துக் கொண்டு, அங்கிருந்த ரோந்து வாகனம் போன்ற வாகனம் ஒன்றில் ஏறி மின்னல் வேகத்தில் புறப்பட்டுச் சென்றார்.

மற்றொரு நபர், தர்ஷீரை தனது பைக்கில் ஏற்றிச் சென்று மதுரவாயல் பாலத்தின் கீழே இறக்கிவிட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். காவலர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த தர்ஷீர், உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்துக்குச் சென்று விசாரித்தார். அப்போது, அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்ட காவலர்கள் யாரும் பணம் பறிமுதல் செய்யவில்லை என்பது தெரியவந்தது.

தான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்த தர்ஷீர், இது குறித்து அளித்த புகாரின் பேரில், கோயம்பேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீஸார் அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளைக் கொண்டு. போலீஸ் உடையில் வந்து கைவரிசை காட்டிய அந்த மர்ம நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஓட்டு போட்டதை வீடியோ எடுத்ததால் தகராறு தவெக பிரமுகருக்கு பீர் பாட்டில் குத்து: பெண் நிர்வாகி தற்கொலை முயற்சி

**வத்திராயிருப்பு, ஏப்.27:** விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகே கோட்டையூர், தெற்குத்தெருவை சேர்ந்தவர் ராமலிங்கம் மனைவி பழனியம்மாள்(34). தவெக நிர்வாகி. இவர் கடந்த 23ம் தேதி சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவின்போது தவெக வாக்குச்சாவடி முகவராக இருந்தார். அப்போது அங்கு வாக்களிக்க வந்த புதிய தமிழகம் கட்சியை சேர்ந்த வசந்த், சிவா ஆகியோர், ஓட்டு போட்டதை செல்போனில் வீடியோ பதிவு செய்தனர். இதற்கு பழனியம்மாள் எதிர்ப்பு தெரிவித்தார். இந்நிலையில் பழனியம்மாள் நேற்று முன்தினம் இரவு கோட்டையூர் அரசு கால்நடை மருத்துவமனை அருகே நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது அங்கு நண்பர்களுடன் வந்த வசந்த், சிவா ஆகியோர், அவரை அவதூறாக பேசி திட்டியுள்ளனர். இதுகுறித்து பழனியம்மாள் தவெகவை சேர்ந்த தனது உறவினரான காசிராஜா என்பவரிடம் கூறியுள்ளார். இதையடுத்து காசிராஜா அங்கு சென்று தட்டிகேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர்கள், காசிராஜாவை பீர் பாட்டிலை உடைத்து குத்தினர். இதில் படுகாயமடைந்த காசிராஜா வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனால் கவலையில் இருந்த பழனியம்மாள் வீட்டில் எலி மருந்தை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றார். அவரை உறவினர்கள் மீட்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

## திண்டுக்கல்லில் பைக்-அரசு பேருந்து மோதி விபத்து; வடமாநில இளைஞர்கள் 2 பேர் பலி

**திண்டுக்கல், ஏப்.27:** திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி அருகே திண்டுக்கல்மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை நடந்த சாலை விபத்தில் வடமாநிலத்தைச் சேர்ந்த 2 இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலக்கோட்டை ஆஞ்சநேயர் கோவில் அருகே பைக்கில் சென்றபோது, அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கிருஷ்ணா (22), தில்சூல் (21) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். தகவல் அறிந்து வந்த அம்பாத்துரை காவல் நிலைய ஆய்வாளர் ஜெயபாண்டி, சார்பு ஆய்வாளர் கிருஷ்ணவேணி உள்ளிட்ட போலீசார் இருவரின் உடல்களை மீட்டு, உடற்கூறு ஆய்வுக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அரசு பேருந்து மோதி வடமாநிலத்தை சேர்ந்த இருவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## திருச்சியில் பட்டப்பகலில் டம்மி துப்பாக்கி காட்டி துணிகரம் நகை மதிப்பீட்டாளரை தாக்கி ஒரு கிலோ தங்கம் கொள்ளை

**திருச்சி, ஏப்.27:** திருச்சியில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை மதிப்பீட்டாளரை தாக்கி ஒரு கிலோ தங்கம் கொள்ளையடித்த 5 பேர் கொண்ட கும்பலை போலீசார் தேடி வருகின்றனர். மகாராஷ்டிராவை சேர்ந்தவர் உதய் (36), திருச்சி பெரிய செட்டி தெருவில் குடும்பத்தோடு தங்கி, நகை மதிப்பீடு பணி செய்து வருகிறார். குடும்பத்தினர் அனைவரும் கோடை விடுமுறைக்காக சொந்த ஊரான மகாராஷ்டிராவிற்கு சென்ற நிலையில், உதய் வீட்டில் தனியாக இருந்துள்ளார். வீட்டின் கீழ் தளத்தில் அவரது கடையில் பணியாற்றும் நிதின் தங்கி உள்ளார்.

நேற்று பகல் 12 மணியளவில் 5 பேர் நிதினிடம் சென்று உங்கள் ஓனரிடம் பேச வேண்டும் என கூறினர். 5 பேரையும் உதய் வீட்டிற்கு நிதின் அழைத்து சென்றுள்ளார். அங்கு அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, 5 பேரும் திடீரென உதயை அடித்து, பாத்ரூமில் அடைத்து கதவை பூட்டி விட்டனர். நிதினையும் அடித்து கட்டி போட்டனர். பின்னர் உதய் வீட்டில் இருந்த நகைகளை கொள்ளை அடித்து சென்றனர். உதய் அலறும் சத்தம் கேட்டு அப்பகுதியினர் வந்து பாத்ரூமில் இருந்த அவரை மீட்டு, திருச்சியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். வீட்டில் இருந்த 1 கிலோ நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளதாக உதய் கோட்டை போலீசாரிடம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிந்துது 5 பேர் கொண்ட மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

இது குறித்து போலீசார் கூறுகையில்,“ நகையை கொள்ளையடித்து பிறகு 5 பேர் கொண்ட கும்பல் முகமூடி அணிந்துள்ளனர். பின்னர், அவர்கள் தயாராக இருந்த ஆட்டோவில் சென்றுள்ளனர். மாநகரில் உள்ள கண்காணிப்பு கேமராக்களின் காட்சி பதிவுகளை ஆராய்ந்து வருகிறோம். கொள்ளையர்கள் உதய் வீட்டில் இருந்த கேமராக்களை சேதப்படுத்தி, ஹாஸ்டு டிஸ்கை எடுத்து சென்றுள்ளனர். அவர்கள் டம்மி துப்பாக்கியை பயன்படுத்தியதாக தெரிகிறது. உதய்க்கு தெரிந்த நபர்களே இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம்,“என்றனர்.

# 8 மாவட்டங்களில் இன்று இபிஎஃப்ஓ குறைதீர்ப்பு முகாம்

**சென்னை, ஏப்.27:** மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இபிஎஃப்ஓ, இஎஸ்ஐ ஆகியவை இணைந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், குறைகளை விரைவாகத் தீர்க்கவும் குறைதீர்ப்பு முகாம் நடத்துகின்றன. அந்த வகையில், சென்னை உட்பட 8 மாவட்டங்களில் குறைதீர்ப்பு முகாம் நாளை (ஏப்.27) காலை 9.15 மணி முதல் நடைபெற உள்ளது.




அதன் விவரம்: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் சார்பில், “வைப்பு நிதி உங்கள் அருகில்” எனும் பெயரில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி முகாம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை,திருப்பத்தூர் ஆகிய 8 மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்காலிலும் நாளை காலை 9 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடைபெறவுள்ளது.

சென்னையில் பிவிஆர் ஹெரிடேஜ், எஸ்ஆர்எல் ஈசிஆர், சென்னை, முதல் தளம், உத்தண்டி சுங்கச்சாவடி அருகே சென்னை என்ற முகவரியிலும், ஸ்ரீ கிருஷ்ண சுவாமி மகளிர் கல்லூரி, ஏசி -48 ஆறாவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை என்ற முகவரியிலும் நடைபெறவுள்ளது.

திருவள்ளூரில் முகப்பேர் தொழிற்பேட்டை, உற்பத்தியாளர் சங்கம், எண்:36, 1-வது தெரு, தொழிற்பேட்டை, முகப்பேர் மேற்கு, சென்னை என்ற முகவரியும், காஞ்சிபுரத்தில் ஹுண்டாய் மொபிஸ் இந்தியா லிமிடெட் ஜி-1, ஜி-4, சிப்காட் இண்டஸ்ட் ரியல் பார்க், இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் என்ற முகவரியிலும், செங்கல்பட்டுவில் பட்டர் ஃபிளை காந்தி மதி அப்ளையன்ஸ் லிமிடெட், 143 புதுப்பாக்கம் கிராமம், வண்டலூர்- கேளம்பாக்கம் சாலை. சென்னை என்ற முகவரியிலும் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்களில் புதியதாக தொடங்கப்பட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள், தொழிலாளர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள், முதன்மை உரிமையாளர், ஒப்பந்ததாரர்களுக்குக்கான புதிய சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி, விலக்கு அளிக்கப்பட்ட நிறுவனங்களுடனான கலந்துரையாடல், உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர், முதலாளிகளிடமிருந்து வரும் குறைகளுக்கான தீர்வு, ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் வாழ்க்கை சான்றிதழ்களை சமர்ப்பித்தல் ஆகிய சேவைகள் வழங்கப்படும் என வருங்கால வைப்பு நிதி நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுபள்ளது.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு டைட்டானியம் உலோகத்தில் செயற்கை மார்பு எலும்பு



**சென்னை, ஏப்.27:** அரியவகை எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட நபருக்கு டைட்டானியம் உலோகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை மார்பு எலும்பை பொருத்தி கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்த சாரதி, ஒருங்கிணைப்பு அதிகாரி ரமேஷ் ஆகியோர் கூறியதாவது: சென்னையைச் சேர்ந்த 59 வயதான ராமசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), எலும்புகளில் ஏற்படும் அரிய வகை புற்று நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

புற்றுநோயின் தீவிரத்தால் மார்பு எலும்பு சிதைவடைந்து, இடது பக்கம் உள்ள 6 விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப் பகுதி வரை நோயின் தாக்கம் பரவியிருந்தது பரிசோதனையில் தெரியவந்தது.

இதையடுத்து, புற்று நோய் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சுஜய் சுசிகார் தலைமையில் மருத்துவர்கள் சக்தி உஷாதேவி, அருள், அருண் விக்டர், அரவிந்த், வரகுண பாண்டியன், சதீஷ், அருண் குமார் மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் கார்த்திகேயன், அருள், சுப்பிரமணியன், பவித்ரா அடங்கிய மருத்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இதில், பாதிக்கப்பட்ட மார்பு எலும்பு. விலா எலும்புகள், அதைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்கள் அகற்றப்பட்டன. இதனால், அப்பகுதியில் 15 × 10 செ.மீ. அளவுக்கு வெற்றிடம் உருவானது. இதையடுத்து, அவரது உடல் அமைப்புக்கு ஏற்ப, 3 டி தொழில் நுட்பம் மூலமாக டைட்டானியம் உலோகத்தில் பிரத்யேகமாக மார்பு எலும்பு வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டது. உடலின் மற்ற பகுதியில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு மார்பில் வைக்கப்பட்டன. சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் உள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் முதல் முறையாக கிண்டி மருத்துவமனையில் தற்போது இந்த அரிய, சிக்கலான உயர்தர அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் இதை மேற்கொள்ள ரூ.12 லட்சம் வரை செலவாகும். ஆனால், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் இலவசமாக செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள லயோலா கல்லூரிக்குள் ஆம்புலன்ஸ் வந்ததால் போலீஸாருடன் தவெகவினர் வாக்குவாதம்

**சென்னை, ஏப்.27:** லயோலா கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாக்கும் மையத்துக்குள் ஆம்புலன்ஸ் வாகனம் சென்றதையடுத்து, சந்தேகமடைந்த தவெக நிர்வாகிகள் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளில் பொதுமக்கள் வாக்களித்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சென்னை லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் ராணிமேரி கல்லூரி ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, லயோலா கல்லூரி மையத்தில் அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர், பெரம்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் எழும்பூர் ஆகிய 6 தொகு திகளின் வாக்குப் பதிவு இயந்திரங்கள் ‘ஸ்ட்ராங் ரூமில்’ வைக்கப்பட்டு, அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் சீல வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மையத்திலும் 4 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதில் சுழற்சி முறையில், 30 மத்திய துணை ராணுவப் படை வீரர்கள், உதவி ஆணையர் தலைமையில் 15 தமிழ்நாடு சிறப்புப் படை வீரர் கள், 40 ஆயுதப்படை வீரர்கள், 50 சட்டம்- ஒழுங்கு மற்றும் போக்குவரத்து போலீஸார் என மொத்தம் 500-க்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு பணியாற்றும் காவலர்கள் மற்றும் ஊழியர்களுக்காகச் சிறப்பு மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

திமுக, அதிமுக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் முகவர்கள் உரிய அனுமதி பெற்று, அங்குள்ள கட்டுப்பாட்டு அறை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இரவு மருத்துவத் தேவைக்காக ஆம்புலன்ஸ் ஒன்று லயோலா கல்லூரி வளாகத்துக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதைக் கண்ட தவெக நிர்வாகிகள், ஆம்புலன்ஸ் உள்ளே செல்வதில் சந்தேகம் இருப்பதாகக் கூறி பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

தவெகவினர் பிடிவாதம்: மேலும், அவர்களிடம் முறையான அனுமதி கடிதம் இல்லாத நிலையிலும், அடையாள அட்டையை மட்டுமே காட்டி உள்ளே செல்ல அனுமதிக்கு மாறு அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து, அனுமதி கடிதம் இன்றி உள்ளே நுழைய முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்த போலீஸார், விதிகளை மீற வேண்டாம் என தவெக நிர்வாகிகளுக்கு கண்டிப்புடன் அறிவுரை வழங்கி அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# பனையேறும் தொழிலாளி மீதான துப்பாக்கிச் சூடு: தென்காசி போலீஸ் விசாரிக்க தடை



**மதுரை, ஏப்.27:** தென் காசி மாவட்டம் ஆலங்குளத் தைச் சேர்ந்த பனையேறும் தொழிலாளி மீது போலீ ஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு வழக்கை தென்காசி மாவட்ட போலீஸார் விசா ரிக்க உயர் நீதிமன்ற மதுரை அமர்வு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தென் காசி மருதம்புத் தூரைச் சேர்ந்த பெருமாள் சேட் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

எனது மகன் மணிகண் டன் பனை மரம் ஏறி பதநீர் இறக்கும் தொழில் செய்து வருகிறார்.

கடந்த 7-ம் தேதி கள் இருப்பதாக சோதனை நடத்தியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் எஸ்ஐ இசக்கி ராஜா துப்பாக்கியால் சுட்டார். இதில் பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த வழக்கை சிபிஐ விசா ரணைக்கு மாற்ற வேண் டும். இழப்பீடு வழங்க உத் தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு, நீதிபதி புகழேந்தி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் புதிய உத்தரவு பிறப்பிக்கும் வரை சம்பந்தப்பட்ட போலீஸார் இந்த வழக்கை விசாரணை செய்யக் கூடாது. சிபிஐ, எஸ்ஐ இசக்கிராஜா ஆகியோர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டார்.

# மே தினம் கொண்டாட்டங்களுக்கு அனுமதி வேண்டும்

**தேர்தல் ஆணையத்துக்கு தொழிற்சங்கங்கள் கடிதம்**



**சென்னை, ஏப்.27:** தமிழ் நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இ ராதாகிருஷ்ணன் மற்றும் சிஐடியு பொதுச்செய லாளர் எஸ்.கண்ணன் ஆகியோர் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் மே தினத் தையொட்டி ஆண்டுதோறும் தொழிற்சங்கங்கள் சார்பில் காலையில் கொடியேற்றுதல், மே தினப் பூங்காவில் அஞ் சலி செலுத்துதல் மற்றும் மாலையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத் துவது வழக்கம்.

இந்நிலையில் தமிழகத் தில் தற்போது வாக்குப்ப திவு முடிந்துவிட்ட போதி லும், தேர்தல் நடத்தை நெறி முறைகள் அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவுக்கு முன் னும், பின்னும் பல மதங் களின் திருவிழாக்கள், சமூக அமைப்புகளின் செயல்பாடு கள் அனுமதிக்கப்படும் நிலை யில், தொழிற்சங்கங்களை மட் டும் அரசியல் கட்சிகளைப் போல அதிகாரிகள் கருதுவது கவலை அளிக்கிறது.

பிரச்சாரமாக பார்க்கக் கூடாது: தேர்தல் காரணங் களுக்காக கொடிமரங்கள் எல்லாம் அகற்றப்பட்டுள் ளன. தேர்தல் முடிந்துவிட்ட சூழலில் மே தின கொண் டாட்டங்களை ஒரு பிரச் சாரமாக பார்க்கத் தேவை யில்லை. எனவே, தொழிலா ளர்கள் தங்களது உரிமையை நிலைநாட்டு வகையில், மே 1-ம் தேதி கொடிமரங்களை நடவும், கொடியேற்றவும், ஊர்வலங்கள், பொதுக்கூட் டங்களை தொழிற்சங்கங் கள் எவ்வித தடையுமின்றி நடத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத் தல்கள் வழங்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப் பட்டுள்ளது.

# விடுமுறை தினம்: திருச்செந்தூரில் குவிந்த மக்கள் கூட்டம்



**திருச்செந்தூர், ஏப்.27:** அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். பொதுவாக விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் விழா நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், கார்களிலும் வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

அந்த வகையில் ஞாயிறு விடுமுறை தினமான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர். போலீசாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# வால்பாறை எஸ்டேட் பகுதியில் சிறுவர்களை தனியாக கடைகளுக்கு அனுப்ப வேண்டாம் - வனத்துறை அறிவுறுத்தல்




**வால்பாறை, ஏப்.27:** தமிழகத்தில் அனைத்து பள்ளிக்கூடங்களுக்கும் கடந்த 16-ந் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் குழந்தைகள் படிக்கும் அங்கன்வாடி மையங்களுக்கும் விடுமுறை விடப்பட்டு உள்ளது.

இந்நிலையில் வால்பாறை மற்றும் மானாம்பள்ளி வனச்சரக வனத்துறையினர் அனைத்து எஸ்டேட் பகுதி தொழிலாளர்களுக்கும் விடுமுறை நாட்களில் தங்களது பிள்ளைகளை வனப்பகுதிகளுக்குள் அழைத்து செல்லக்கூடாது. மாலை நேரத்தில் சிறு குழந்தைகளை வீட்டை விட்டு வெளியே விட வேண்டாம்.

சிறுவர், சிறுமிகளை எஸ்டேட் குடியிருப்பு பகுதியில் உள்ள கடைகளுக்கு பொருட்கள் வாங்கி வர மாலை நேரம் மற்றும் இரவு நேரங்களில் தனியாக வெளியே அனுப்ப வேண்டாம். குடியிருப்பை ஒட்டிய தேயிலை செடிகள் உள்ள இடங்களில் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை கண்காணித்துக் கொள்ள வேண்டும். சிறுத்தைப்புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகளிடம் இருந்து குழந்தைகளை தற்காத்து கொள்ள மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றனர்.

இந்த கோடை விடுமுறை நாட்களில் சிறுவர்களை மோட்டார் சைக்கிளை ஓட்ட அனுமதிக்க கூடாது. எனவே பெற்றோர் நீங்கள் தான் உங்களது பிள்ளைகளுக்கு உரிய அறிவுரைகள் சொல்லி பாதுகாக்க வேண்டும் என போலீசாரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மீன்பிடி தடைகாலம்: பழவேற்காடு மார்க்கெட்டுக்கு படையெடுக்கும் மீன் பிரியர்கள்



**பழவேற்காடு, ஏப்.27:** பழவேற்காடு ஏரி இந்தியாவின் மிகப்பெரிய 2-வது உவர்ப்பு நீர் ஏரியாகும். 60-க்கும் மேற்பட்ட மீனவ கிராம மக்கள் மீன் பிடி தொழில் செய்து வருகிறார்கள். 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படகுகளில் ஏரி மற்றும் கடல் பகுதியில் மீன் பிடித்து வருகின்றனர்.

பழவேற்காட்டில் கடல் நீர் 6 மணி நேரம் முகத்துவார வழியாக ஏரிக்கும், மீதம் உள்ள 6 மணி நேரம் ஏரியில் இருந்து கடலுக்கும் சுழற்சி முறையில் சென்று வருகின்றன.

இதனால் ஏரியில் தண்ணீர் குறையாமலும் சூடாகாமலும் இருப்பதால் ஏரியில் வாழும் மீன்கள், இறால்கள் நன்கு வளர்ந்து காணப்படும். இதனால் பழவேற்காடு மீன்களுக்கு தனி சுவையும், தனி மவுசும் உண்டு.

பழவேற்காடு கடலில் பிடிக்கப்படும் மீன்கள் ஐஸ் வைத்து பதப்படுத்தப்படாமல் நேரடியாக விற்கப்படுவதால் சென்னையில் இருந்தும் மீன் பிரியர்கள் ஏராளமான பேர் விடுமுறை நாட்களில் குவிந்து வருகிறார்கள்.

தற்போது மீன்பிடி தடைக்காலம் காணப்படுவதால் சென்னை காசிமேடு பகுதியில் விசைப்படகுகள் கடலுக்குள் செல்லாததால் பெரிய மீன்கள் விற்பனைக்கு வருவது குறைந்து உள்ளது. இதனால் தற்போது சென்னை மற்றும் பிற பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் அதிகமாக பழவேற்காடு பகுதிக்கு படையெடுத்து வருகிறார்கள்.

சென்னை மற்றும் புறகர் பகுதிகளை சேர்ந்தவர்களும் பழவேற்காடு மீன்களை வாங்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் பழவேற்காட்டில் விடுமுறை நாட்களில் மீன் வாங்க வரும் மீன் பிரியர்களின் வருகை அதிகரித்துள்ளது. விடுமுறை நாளான இன்று கூட்டம் களை கட்டியது. எனினும் மீன்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

வஞ்சிரம் ரூ.1400 வரை விற்பனை செய்யப்பட்டது. பால் சுறா-ரூ.800க்கு விற்பனையானது.

பழவேற்காடு மார்க்கெட்டில் மீன் விலை வருமாறு:- பாறை மீன்-ரூ.600 முதல் 800, வாளை- ரூ.259, இறால்- ரூ.300 முதல் ரூ.600 வரை, காணங்கத்தை- ரூ.350 கொடுவா-ரூ.800, வவ்வால்-ரூ.600, உள்பாத்தி-ரூ.250, கோல்வாசி-ரூ.300, கடல் நண்டு-ரூ.400, கிளிமீன்-ரூ.250, சங்கரா-ரூ.300, ஏரி நண்டு-ரூ.300 முதல் 800 வரை, சிறிய வகை மீன்கள்-ரூ.200 முதல் ரூ.300 வரை.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் குவிந்த பக்தர்கள் கூட்டம்



**திருவண்ணாமலை, ஏப்.27:** திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அண்ணாமலையார் கோவில் உள்ளது. இந்த கோவில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

குறிப்பாக வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் அண்ணாமலையார் கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருவது வழக்கம். அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமையான இன்று, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் அதிகாலை முதலே தமிழகம் மட்டுமின்றி வெளி மாநில பக்தர்களும் அதிக அளவில் குவிந்தனர்.

அதிகாலை 4.30 மணியளவில் கோவில் நடை திறக்கப்பட்டு அண்ணாமலையார் - உண்ணாமுலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தெடர்ந்து, ராஜகோபுரம் நுழைவு வாயில் வழியாக வந்து நீண்ட வரிசையில் சுமார் 2 மணிநேரத்திற்கும் மேலாக காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

# சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நிறைவு: 1,400 போலீசார் சொந்த ஊர் திரும்பினர்



**சென்னை, ஏப்.27:** தமிழகம் முழுவதும் கடந்த 23-ந் தேதி, சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடைபெற்றது. மொத்த வாக்காளர் எண்ணிக்கை 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும்.

அவர்களில் 4 கோடியே 87 லட்சத்து 99 ஆயிரத்து 140 பேர் வாக்களித்துள்ளனர். வாக்களித்தோரின் சதவீதம் 85.10 ஆகும்.

இது தமிழக சட்டமன்ற தேர்தல் வரலாற்றில் பதிவாகியுள்ள அதிகபட்ச வாக்குப்பதிவாகும். சட்டமன்ற தேர்தலையொட்டி, 300 மத்திய கம்பெனி துணை ராணுவத்தினரும், தமிழக போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிக்காக கோவை, ஈரோடு உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களுக்கு பணி அமர்த்தப்பட்ட மராட்டியம், கோவா மாநில போலீசார், மத்திய தொழில் பாதுகாப்பு படை, எல்லை பாதுகாப்பு படை என மொத்தம் 1,400 போலீசார் தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பினர்.

# களைகட்டிய கொடைக்கானல் படகு சவாரி



**நீலகிரி, ஏப்.27:** தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. மேலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் தரைப்பகுதிகளில் நிலவும் வெப்பத்தை சமாளிக்கவும். குளு குளு சீசன் தொடங்கிய நிலையில் 'மலைகளின் இளவரசி'யான கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் படையெடுத்து வருகின்றனர். இதனால் நேற்று காலை முதல் அவர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது. இதனால் எங்கு பார்த்தால் மக்களின் தலையாகவே இருந்தது.

இதனால் சீனிவாசபுரம், உகார்த்தேநகர், மூஞ்சிக்கல், ஏரிச்சாலை, பாம்பார்புரம் மற்றும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா தலங்களுக்கு செல்லும் சாலையிலும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அணிவகுத்து ஊர்ந்தபடி சென்றன.

இதனால் பல்வேறு பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்பட்டதால் கொடைக்கானல் நகரமே திக்குமுக்காடி போனது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் பாதிப்பு அடைந்தனர்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் பகல் நேரத்தில் 21 டிகிரி செல்சியஸ் முதல் 25 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவியது. பின்னர் பிற்பகல் முதல் அதிகாலை வரை லேசான காற்றுடன் கூடிய இதமான குளிரும் நிலவி வருகிறது. இதனை சுற்றுலா பயணிகள் அனுபவித்தனர். மேலும் வனப்பகுதிகளில் உள்ள சுற்றுலா இடங்கள் மற்றும் நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்தும், பூங்காவில் பூத்துள்ள பூக்களைக் கண்டும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தநிலையில், கோடை விடுமுறையை முன்னிட்டு சுற்றுலா தலங்களில் பொதுமக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். உதகை, கொடைக்கானலில் இதமான காலநிலையில் படகு, குதிரை சவாரி செய்து உற்சாகம் அடைந்து வருகின்றனர்.

கோடை வெப்பத்தைத் தணிக்க நெல்லை மாவட்டம் அகஸ்தியர் அருவியில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்து நீராடி மகிழ்ந்தனர்.

# சென்னையில் தட்டம்மை பாதிப்பு குழந்தைகளுக்கு விரைந்து தடுப்பூசி செலுத்த வேண்டும்: மருத்துவர்கள் வலியுறுத்தல்

சென்னை: தட்டம்மை பாதிப்பு சென்னையில் கணிசமாக பதிவாகி வரும் நிலையில் சரியான நேரத்தில் தடுப்பூசிகளை குழந்தைகளுக்கு செலுத்த மருத்துவகள் வலியுறுத்தி உள்ளனர். அண்மைக்காலமாக சென்னையில் தட்டம்மை பாதிப்புகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருவதாகவும், இவை கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடாததன் விளைவாக இருக்கலாம் என குழந்தைகள் நல மருத்துவர்கள் கருத்துகள் தெரிவித்துள்ளனர். இது பெற்றோர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளன. மேலும், கோடைக்காலம் தொடங்கியுள்ள இந்த சூழலில் இதுபோன்ற வைரஸ் தொற்றுகள் எளிதாக பரவும் அபாயம் இருப்பதால் போதிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், பாதி தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் தட்டம்மையால் பாதிக்கப்பட்ட மற்றொரு குழந்தையுடன் தொடர்பில் வரும்போது, அவர்களுக்கும் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அரசு மருத்துவமனைகளில் தடுப்பூசிகள் இலவசமாக போடப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் தடுப்பூசி அட்டவணையைப் பின்பற்றுவது முக்கியமாகும். இந்த தட்டம்மை காய்ச்சல் குறைந்த பின்னரும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உடனடியாக வெளியில் அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகள் தாராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும் மற்றும் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும். தட்டம்மைக்குப் பிறகு வைட்டமின் ஏ சத்து வழங்குவது முக்கியம். ஒட்டுமொத்தமாக தடுப்பூசி போடுவதே முதல் தடுப்பு நடவடிக்கையாகும். ஒரு குழந்தைக்குத் தட்டம்மை ஏற்பட்டால், இருமல் மூலம் பரவும் தொற்றுத் துகள்களிலிருந்து மற்ற குழந்தைகளை பாதுகாக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் வீட்டிலேயே தங்கி போதுமான ஓய்வு எடுக்க வேண்டும். காய்ச்சலைத் தவிர, இதற்கு என்று குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை என்றாலும், சில குழந்தைகளுக்கு நிமோனியா மற்றும் காது தொற்று போன்ற சிக்கல்கள் ஏற்படலாம். எனவே பெற்றோர்கள் சரியான நேரத்தில் குழந்தைகளுக்கான தடுப்பூசியை செலுத்த வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.




# "தமிழகத்தில் வழக்கமான வாக்குப் பதிவுதான்" - திருமாவளவன் 'லாஜிக்' கருத்து



**சென்னை, ஏப்.27:** "எஸ்ஐஆர் காரணமாக வாக்கு சதவீதம் அதிகரித்தது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் வழக்கமான வாக்குப் பதிவுதான் நடந்துள்ளது" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "தமிழகத் தேர்தலில் வழக்கமான வாக்குப் பதிவுதான் நடந்துள்ளது. இதில் வியப்படைவதற்கு ஒன்றும் கிடையாது. வாக்காளர் பட்டியல் எஸ்ஐஆர் சிறப்பு திருத்தம் மூலம், லட்சக்கணக்கான வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டு உள்ளன. அவ்வாறு நீக்கம் செய்யப்படாமல் இருந்து, வாக்குப்பதிவு நடந்திருந்தால், பழைய மாதிரியே வாக்குப்பதிவு நடந்திருக்கும்.

ஆனால் எஸ்ஐஆர் திருத்தம் மூலம் வாக்குப் பதிவு செய்யப்படாமல், எண்ணிக்கையில் மட்டும் இருந்த, லட்சக்கணக்கான வாக்குகள் நீக்கம் செய்யப்பட்டு இருப்பதால், கூடுதலாக வாக்குப்பதிவு நடந்துள்ளது போன்ற தோற்றம் உருவாகி உள்ளது.

ஒவ்வொரு 5 ஆண்டு தேர்தலுக்குப் பிறகும், புதிய வாக்காளர்கள் 20 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இணைவார்கள். அந்த வகையில், 20 லட்சம் முதல் 25 லட்சம் வரை புதிய வாக்காளர்கள் தற்போது சேர்ந்து உள்ளனர். அவர்கள் போட்ட வாக்குகள்தான் கூடுதலாகி உள்ளன. இது ஐந்த ஆண்டுகளுக்கு ஒரு முறை வழக்கமாக நடப்பதுதான்.

இந்த தேர்தலில் மீண்டும் திமுகதான் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். இதை களத்தில் மக்களை நேரடியாகச் சந்தித்தபோது உணர முடிந்தது.

தமிழகத்தில் தொங்கு சட்டப்பேரவை அமையும் என்று நான் எப்போதும் சொல்லவில்லை. தேர்தலுக்குப் பிறகு அரசியல் சூழல் மாறும் என்றுதான் கூறினேன்.

அதாவது, தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, விஜய் வாங்கிற வாக்கு சதவீதத்தைப் பொறுத்து, தமிழக அரசியல் சூழல் மாறும் என்ற பொருளில் சொல்லி இருந்தேன்" என்று அவர் கூறினார்.

# தேர்தல் முடிவுகள் வெளியாகும் நாளான மே 4-ம் தேதி விஜய் ஆஸ்திரேலியா பயணம்?



**சென்னை, ஏப்.27:** சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முடிவுகள் வெளியாகும் மே 4-ம் தேதி அன்று, தவெக தலைவர் விஜய் ஆஸ்திரேலியா செல்லவுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு கடந்த 23-ம் தேதி நடைபெற்றது. இதையொட்டி, கடந்த ஒரு மாத காலமாக அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தனர். தேர்தல் முடிந்துள்ள நிலையில், தற்போது அவர்கள் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக சுற்றுலாத் தலங்களுக்கு சென்று வருகிறார்கள்.

அந்த வகையில், தவெக தலைவர் விஜய்யும் வரும் மே 4-ம் தேதி ஆஸ்திரேலியா செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அன்றைய தினம்தான் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாக இருப்பதுதான் இதற்கு காரணம்.

இதுகுறித்து, தவெக வட்டாரங்கள் கூறியதாவது: பொதுவாக விஜய் தனது படங்களின் படப்பிடிப்பு முடிந்த பிறகு, வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார்.

தற்போது, தேர்தல் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், அவர் வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ளார். அதன்படி, தேர்தல் முடிவுகள் வெளியாகவுள்ள 4-ம் தேதி அவர் ஆஸ்திரேலியா செல்லக் கூடும் என்று கூறப்படுகிறது. இதற்காக அவர் டிக்கெட் முன்பதிவு செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இருப்பினும், தேர்தலில் வெற்றி பெற்று நாங்கள்தான் ஆட்சி அமைப்போம் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. எனவே, அன்றைய தினம் முடிவுகள் எங்களுக்குச் சாதகமாக இருந்தால், தலைவர் வெளிநாடு செல்லும் முடிவைக் கைவிட்டுவிடுவார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# அதிமுக நிர்வாகிகள் மீது தாக்குதல் நடவடிக்கை எடுக்க எடப்பாடி கோரிக்கை



**சென்னை, ஏப்.27:** அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: தொண்டாமுத்தூர் தோட்டத்து சாலையில் வசிக்கும் அதிமுகவை சேர்ந்த மாரிமுத்து என்பவரையும் அவரது மகனையும் பொள்ளாச்சியை சேர்ந்த கதிர்வேல் என்பவர், தேர்தல் பகையால், காரை ஏற்றி தாக்கியுள்ளார்.

இதில் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். அதேபோல், கிருஷ்ணகிரி தொகுதியில் இதயாத் என்ற வாக்குச்சாவடி முகவரை சிலர் தாக்கியுள்ளனர். இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க காவல்துறை தலைமை இயக்குனரை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM